தென்றல்

ஆசிரியர் - கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு, வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 1-3-58 | சனிக்கிழமை | இதழ் 33

பாத்திரப் படைப்பு : 2

முன்ஷியின் மிருணாலவதி

கண்ணதாசன்

"காதலும் கவிதா ரசனையும் பலங் கெட்டவர்களின் காரியங்கள். வாழ்க்கை, சுவைப்பதற்காக ஏற்பட்டதல்ல; கவிஞர்கள் என்பவர்கள் உலகின் உறுதிப்பாட்டைத் தளரச் செய்துவிட்ட பயங்கரவாதிகள். மென்மையான மலர்களும் குளிர்ந்துவரும் காற்றும் படைப்பில் ஏற்பட்ட பலவீனமான அம்சங்கள். தியாகம், சாந்தி - இவைதான் உலகில் நிலையானவை."

—இப்படிச் சிந்தித்தாள் ஒருத்தி. அவள் சாளுக்கிய நாடாகிய தைலங்கணத்தின் ராணி. மன்னன் தைலபனின் தமக்கை. அவள் பெயர்தான் **மிருணாலவதி**.

சாதாரணமாக வாழ்க்கையில் காணமுடியாத அற்புதமான படைப்பு மிருணாலவதி. பெண்மை, மென்மையை வெறுக்கும் வைராக்கியம் எவ்வளவு காலம் நிற்கும் என்பதை உருவகப்படுத்திக் காட்டும் உன்னத ஓவியம் மிருணாலவதி.

விக்ரம சகாப்தம் ஆயிரத்து ஐம்பத்திரெண்டாம் ஆண்டு வைகாசி மாதத்தில் முன்ஷியின் கதை தொடங்கும்போது மிருணாலவதிக்கு வயது நாற்பத்திஏழு. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் அவளது கணவன் இறந்துவிட்டான். தென்திசையில் ஒரு பேரரசை அமைக்கவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த அவளது சகோதரன் தைலபன், அவளுக்கு ஐந்தாறு வயது இளையவன்.

தாயார் இறந்தபிறகு தமக்கை மிருணாலவதிதான் அவனுக்குக் தாய்போல இருந்து வளர்த்தாள். எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தாள். அரசியல் நிலைகளைச் சொல்லித் தந்தாள். வீரம் ததும்பும் கதைகளைக் கூறி அவனை வீரனாக்கினாள். பாழ்பட்டுப் போன தன் வாழ்க்கையை, தைலபனின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதில் செலவழித்தாள்.

வயது வந்ததும் தைலபன் அரியாசனம் ஏறினான். ஆனால் அரசியல் காரியங்களை மிருணாலவதிதான் கவனித்தாள். போருக்குச் செல்வதும் நாட்டைப் பாதுகாப்பதும் மற்ற நாடுகளில் அதிகாரத்தைப் பரப்புவதும்தான் தைலபனின் வேலைகள். மிருணாலவதி அவனை அடக்கி ஆண்டாள். அவன் கிழித்த கோட்டை அவன் தாண்ட மாட்டான். அவள் இட்டதுதான் சட்டம்.

அவள் ஏன் பெண்மையின் மென்மையையே இழந்திருந்தாள்? பிறந்ததுமுதலே அப்படித்தானா? இல்லை. குழந்தைப் பருவத்தில் மிருணாலவதி அன்பே உருவானவள். ரசிகத்தன்மையில் தேர்ந்தவள். வாழ்க்கையை வாழ்க்கையாக ரசிக்க ஆசைப்பட்டவள். காவியங்களில் ஈடுபாடுடையவள். கவிஞர்களைப் போற்றி வளர்த்தவள். மங்கைப் பருவம் மலர்ந்தபோது வாழ்க்கையின் சுவைகளை அண்டி, அருகிருந்து பருகத் துடிக்கும் கன்னியாக அவள் விளங்கினாள். பருவத்தின் துடிப்புகள் பிற பாவைகளைப்போலவே அவளுக்கு மிருந்தன. விளக்கிக் கூறமுடியாத ஆசைகளின் இருப்பிடமாக அவள் இருந்தாள். ஆனால் மணமுடித்த சில நாட்களிலேயே அவள் விதவையானாள். அரசியலைத் தாங்கிக் கொண்டிருப்பவள், தைலபனின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்த வேண்டியவள் என்பதற்காக உள்ளத்தில் உதித்த ஆசைகளையெல்லாம் ஒதுக்கினாள். இந்த ஒதுக்கித் தள்ளும் குணம் அவளுடைய வாழ்க்கையை வெறும் வைராக்கிய வாழ்க்கையாக ஆக்கிவிட்டது. கொஞ்சங் கொஞ்சமாக, சுகத்தையும் துக்கத்தையும் பருத்துணரும் உள்ளத்தின் மென்மையை அவள் அழித்துவிட்டாள். இரக்கத்தையும் கருணையையும் அவள் வேரோடு களைந்தாள். இவைகளை நிறைவேற்ற அவள் கடு முயற்சி செய்ய வேண்டித்தான் இருந்தது. செய்தாள். அந்த முயற்சி அவளது உள்ளத்தை எரித்து அவளது நிச்சய புத்தியை மேலும் உறுதிப்படுத்திற்று. மாற்றமடைந்த மிருணாலவதிக்கு உலகைப் பற்றிய கொள்கைகளும் மாறின. கடுமையான ஒரு வைராக்கியமின்றி உலக முழுவதும் மீளமுடியாது என்ற சித்தாந்தத்தில் இறங்கினாள். அவள் தன் ஆசைகளை மட்டும் அடக்கவில்லை. அமைதியற்ற குடிமக்களின் வாழ்வில் தவழ்ந்துகொண்டிருந்த ஆவல், ஆனந்தம், மென்மை, அனைத்தையும் கட்டுப்படுத்த முயன்றாள். இதையொட்டி கட்டளைக்குமேல் கட்டளையாகப் பிறப்பித்தாள். கவிஞர்களும், நடிகர்களும், பாடகர்களும் வைராக்கியத்திற்குத் தடையென்று கருதி, அவர்களை நாடு கடத்தினாள். இன்பத் திருவிழாக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள். வெளிப்படையாக அழுது, அடித்துக்கொள்ளக்கூடாது என்று உத்தரவு போட்டாள். நகரத்திலும் சரி, அரண்மனையிலும் சரி, கடூரமும், சித்த உறுதியும் பரவி வந்தன. கடைசியில், காதல், உற்சாகம், திருவிழா—எல்லாம் பெருங் குற்றங்களாகக் கருதப்படத்தொடங்கின. காதலர்கள் இன்பச்சுவையை மறந்து தர்ம பரிபாலனத்தில் இறங்கினர். ஆனந்தத்தில் மூழ்கி இருந்த குடும்பங்கள் இயந்திரச் சக்கரங்களைப்போல் சுவையற்ற வாழ்க்கையில் ஒரே மாதிரி ஓடத்தொடங்கின. கவிஞர்களின் இடத்தை தத்துவ ஞானிகளும், முனிவர்களும் கைப்பற்றிக்கொண்டார்கள். இரக்க சுபாவம் அடியோடு அழிந்தது. இதயத்தின் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்கவேண்டியதாயிற்று. அன்பையும் ஆனந்தத்தையும் அனுபவிக்க விரும்பியவர்கள் பயந்துகொண்டே ரகசியமான இடங்களுக்குச் சென்றார்கள்.

வாழ்க்கையிலிருந்த எல்லா ஆசைகளையும் அடியோடு ஒழித்துவிட்ட மிருணாலவதியிடம் ஒரே ஒரு ஆசை மட்டும் அக்குதொக்காக மிஞ்சி நின்றது. அதுதான் அவளுடைய தம்பியின் புகழ் பரவ வேண்டுமென்பது. அந்தப் புகழுக்குக் குறுக்கே நின்றவர்களை அடக்கி நசுக்கிவிட அவள் முயன்றாள். ஆனால் அவளது அரசியல் ஆசைகளுக்கு குறுக்கே நின்றான் மாளவ நாட்டின் மன்னன் **முஞ்சன்**. அவன் **'பிரிதிவிவல்லபன்'** என்ற பெயரை விருதுப்பெயராகக் கொண்டவன். அவன் பதினைந்து, பதினாறு தடவைகள் மிருணாலவதியையும் தைலபனையும் தோற்கடித்தான். தைலங்கணத்தைக் கலக்கி எடுத்தான். தைலபன், தன்னுடைய கால்களைக் கழுவும்படி செய்தான். இந்த வேதனைகளை மிருணாலவதியால் மறக்கவே முடியவில்லை. எப்படியும் முஞ்சனை அடக்கிக் கைது செய்ய வேண்டும் என்றே அவள் விரும்பினாள். ஆனால் முஞ்சனோடு போர் புரிவதில் தைலபன் தளர்ந்திருந்தான். முஞ்சனுக்குக் கப்பம் கட்டிவிட்டு அமைதியாகத் தைலங்கணத்தை ஆள அவன் விரும்பினான். இந்த பலவீனத்தைக் கட்டுப்படுத்தி பழையபடியும் ஒரு போருக்குத் தயாராக்கினாள் மிருணாலவதி.

தைலபனின் குடும்பச் சூழ்நிலை வேடிக்கையானது. அவன் மனைவி பெயர் சக்கலாதேவி. மிருணாலவதியின் அனுமதியின் பேரில்தான் தைலபன் மனைவியோடு சரசமாட முடியும். அப்படிக் கிடைத்த அபூர்வமான சந்தர்ப்பங்களினால் சக்கலாதேவி ஒரு மகனைப் பெற்றெடுத்திருந்தாள். அவன் பெயர் சத்யாசிரயன். அவனுக்கு அப்போது வயது சுமார் இருபது இருக்கும். சக்கலாதேவியின் ஒன்றுவிட்ட சகோதரி லெட்சுமிதேவி; அவளுடைய கணவன் சுயூன தேசத்துமன்னனான பில்லமன். மிருணாலவதியின் அதிகார வெறிக்கு முதன்முதலில் பலியானது சுயூன தேசம். தன் மைத்துனியையும் மைத்துனியின் கணவன் பில்லமனையும் கைது செய்துகொண்டு வைத்திருந்தான் தைலபன். சொந்த நாட்டை மறந்து தைலங்கணத்திலேயே அவர்கள் வாழத் தொடங்கியபோது அவனை தன் மந்திரியாகவும், தளபதியாகவும் ஆக்கிக் கொண்டான் தைலபன். கதை நடக்கும்போது பில்லமனுக்கும் லெட்சுமிதேவிக்கும் விலாசவதி என்றொரு மகள் பருவம் வந்தவ

— 3ம் பக்கம் —



தற்கால அரசியல் அமைப்பில் மேல்சபை, கீழ்சபை என இரண்டு சபைகள் பெரும்பான்மையாக உள்ளன. நேரடியாகத் தேர்தலுக்கு நின்று மக்களின் ஓட்டுகளைப் பெற்று வாயில் வழியாக உள்ளே நுழைபவர்கள் மக்கள் சபை (கீழ்சபை) உறுப்பினர்கள். இவர்களின் சட்டசபை வாழ்நாள் ஐந்து ஆண்டுகள். பெரும்பான்மையான இடங்களைப் பற்றுகிற கட்சி, அரசியலை ஏற்று நடத்தும். அதற்கு அடுத்த பெரும்பான்மையான கட்சி எதிர்க்கட்சி. ஆளும்கட்சி ஏதோ காரணத்தால், ஆட்சி நடத்த முடியாத நிலை வரும்போது, எதிர்க்கட்சி தான் ஏற்று நடத்தும் திறனும், பொறுப்பும் தகுதியும் உடையதாக இருக்கவேண்டும். இது தான் உலக சட்டசபைகளுக்கெல்லாம் தாய் (Mother of Parliaments) எனத்தகும் இங்கிலாந்தின் மரபு.

மேல்சபை

இதன் அங்கத்தினர்கள் மக்களிடத்தில் நேரடித் தேர்தலில் ஓட்டுப் பெருமல், தேர்தலுக்கும் நிற்காமல், கனம் கவர்னர் அவர்களால் தேர்ந்து "அழைக்கப்படுபவர்கள்" ஆவார்கள். கல்வி, அரசியல் ஞானம், முதிர்ந்த அனுபவம், இன்னபிற தனித்துறைகளில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்கள் நாட்டில் இருப்பார்கள் அல்லவா? அவர்கள், தாங்களாக தேர்தலுக்கு நின்று பணம் செலவழிக்கவோ, வேறு பல தொல்லைகளை ஏற்கவோ விரும்பாத பெரியவர்கள். என்றாலும் அவர்களுடைய தொண்டு வீணாகக் கூடாது என்பதற்காகவே அவர்களை அழைத்து அமர்த்துவதே மேல்சபையாகும். (இங்கிலாந்தில் பரம்பரைச் சீமான்களைக் கொண்டதே மேல் சபை.)

கீழ்சபையில் உள்ள உறுப்பினர் அனைவருமே கல்வியும், அனுபவமும் விஞைத்திட்பமும் உடையவர்களாயிருக்கமாட்டார்கள். அதனால் அவசரப்பட்டு எதை எதையோ சட்டமாக ஆக்க பிரேரேபணை செய்வர். அது பெரும்பான்மையோரின் (Majority) ஆதரவு பெற்றால் சட்டமாசத் தகுதியுடையதாகும். சட்டமாக்கப்படுமுன் அது மேல் சபைக்குப் பரிசீலனைக்குக் கொண்டு வரப்படும். அதில் மாற்றமோ, திருத்தமோ செய்ய விரும்பும் மேல்சபை, அதில் உள்ள குறைகளைக் கூறி, நிறைவுக்கு வழி காட்டி மீண்டும் கீழ்சபைக்கே திரும்ப அனுப்பும். கீழ்சபை அதை ஏற்றால், திருத்தம் நிகழும். இல்லையேல் மீண்டும் அப்படியே "மேலுக்கு" அனுப்பப்படும். இப்படி மும்முறை மேல்சபை தடுத்தபின்பும் கீழ்சபை அடம் பிடித்தால், முடிவாக கவர்னரின் கையொப்பத்திற்குப் போய் சட்டமாக நடைமுறைக்கு வரும். சட்டமாக வந்த பிறகு அனைவரும் அதற்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும்.

'An act of government cannot be questioned in a court of law' என்பது அரசியல் பழமொழி. அவசரப்பட்டு எதையும் சட்டமாக்க முயலுங்கால் 'சற்றே பொறும் பிள்ளாய்' எதுக் கூறி, நீடு நினைத்துப் பார் என்பதற்காகவே இம்மேல்சபை உள்ளது. இதுதான் அதன் நோக்கங்களில் முக்கியமானது. மேலும் பணத்தைப் பொறுத்த எந்த பிரேரேபணையும் மேல்சபை அங்கத்தினர் கொண்டு வரவோ, அல்லது அது சட்டமாக்கப்படுவதைத் தடுக்கவோ முடியாது. ஆக கூர்ந்து நோக்குங்கால் எதையுமே தானாகச் செய்ய அதிகாரம் பெருத ஒரு சபையின் வேலைதான் என்ன? அது இருக்கத்தான் வேண்டுமா? என்ற வினாக்களுக்கு விடையாக இங்கிலாந்தின் தொழிற்கட்சியைச் சார்ந்த பெவான் அண்மையில் எழுதினார்:

"அவசரமாக ஒன்று சட்டமாவதற்கு, தற்காலத்தில் வழியே இல்லை. கீழ்சபையில் ஒன்றை விவாதிப்பதற்கும் பாரபட்சமின்றி நல்ல உள்ளத்துடன் பரிசீலனை செய்யவும் போதிய அவகாசம் இருக்கிறது. மேலும் ஒன்று விவாதத்தில் இருக்கும் போது, பத்திரிகைகள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றன. மக்களும் அவைகள் மூலம் தங்கள் கருத்துக்களை வெளியிடுகின்றனர். மேடைகளில் கட்சிகள் தங்கள் கருத்துக்களை உமிழ்ந்த வண்ணம் இருக்கின்றன. பட்டப் படிப்பின் தேர்வு விடைத் தாளில் மாணவர்களும் தங்கள் கருத்துக்களைப் படைக்கிறார்கள். ஆக இவ்வழிகளில் மக்கள் கருத்து (Public Opinion) பிரதிபலிக்கின்றன. ஒன்று சட்டமானால் வரும் நன்மை தீமைகளை ஆய்ந்து உணர போதிய நேரம் உண்டு. இதில் மேல்சபை மட்டும் தனியே சாதிப்பது ஒன்றும் இல்லை!"

ஊர்ப்புரத்தில், வழக்குமன்றத்திற்கு வர இயலாத அவ்வளவு முதியவரின் கருத்தையும் கலந்து, பின் முடிவு கூறல் நம் மரபு. அதுபோல இம் மேல் சபை உறுப்பினரை ஒன்று பிரேரேபணைக்குக் கொணரும் முன்னர் அது குறித்துக் கலந்து பேசலாம். அல்லது முதல் விவாதத்தின் போதே அவர் உடன் இருந்து கலந்து கொள்ளலாம். தங்கள் கருத்துக் கூறி தவறை முளையில் கிள்ளி விடலாம். இது எளிது. அதற்கு மாருக கீழ்சபையில் அதற்குச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்த பின்னர், அது சட்டமாவதற்கு முக்காற்பங்கு உருவெடுத்த பின்பு, அதைத் திருத்தி, மாற்றி, உருக்குலைய ஒப்புக்கொள்வது, அதனை உருவாக்கி அனுப்பிய கீழ்சபை அங்கத்தினருக்கு, தங்கள் மரியாதையையும், தரத்தையும், தகுதியையும், குறைத்துக் கொள்ள தாமே பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுவது போன்ற தாழ்மை மனப்பான்மை (Inferiority Complex) உண்டாக்குகிறது. பெரும்பான்மையாக இது உள்ளூர அனைவருக்கும் உண்டு. தான் செய்தது தவறு என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் முதிர்ந்த பெருந்தன்மையை எல்லோரிடத்தும் எதிர்ப்பார்க்க முடியாது.

இப்படி ஒன்றும் செய்ய வல்லதல்லாத மேல்சபையை அப்படியே விட்டு வைப்பதும் அதை நடத்த ஆகும் செலவும் வீண் விரயமாகும்.

ஏற்கனவே உள்ள கவர்னர் பதவி வீணானது. இது பலரும் ஒப்பும் முடிவு. வீண் விரையப் பட்டியலில் முதல் இடம் பெற அதோடு இதுவும் ஒன்று.

சனம் கவர்னர் அவர்கள் இருக்க இடம், போக வரச் செலவு முதலானவற்றை அரசாங்கம் ஏற்ற பிறகு அவருக்குச் சம்பளம் என்று தனியாக— 'புடாமல்' தரும் தொகை மாதம் ரூ. 5500. அவர் மாளிகையில் உபயோகிக்கப்படும் விளக்கு போன்றவற்றிற்கு ரூ. 30,000 எனப்படுகிறது. இது நான்கு பேர் உள்ள சாதாரணக் குடும்பத்தில் மாதத்துக்கு ரூ. 5 ஆகலாம். குடும்பச் செலவில் மின்சாரம் உபயோகிக்கும் கட்டணம் பெரும்பான்மை அல்ல; "ஒரு கலயம் கூழுக்கு, ஒரு சிறு அளவு உப்பு போல." உப்பே, ரூ. 30,000 ஆனல் மற்றவை எந்த அளவில் குவியும் என்று எண்ணவே முடியவில்லை.

இத்தகு உயர் பதவி வகிக்கும் கவர்னரின் முக்கியப் பணிகள் யாவை? எதிர்பாராத விதமாக எப்போதாவது நாட்டில், கலகம், புரட்சி, அன்னியர் படை எடுப்பு நெருக்கடி நேர்ந்து, ஆளும் மந்திரி சபை ஆட்டங் கொடுத்து விட்டால் உடனே கனம் கவர்னர் அவர்கள் மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, 'கடிவாளத்தை'த் தன் கையில் கொண்டு நடத்துவார். இப்படிப்பட்ட உயர் பதவிக்கு அவர் 'சர்வ ஞானியாக', சர்வ வல்லவராக இருக்க வேண்டும்.

நாம் வாழும் இவ்விருபதாம் நூற்றாண்டு, காட்டுமிராண்டிகள் வாழும் நாட்களா? அல்லது உலகைப் பாயாகச் சுருட்டி ஆழ் கடலில் ஆழ்த்திவிட யாராலாவது முடியுமா? அல்லது நள்ளிரவில், பெருவெள்ளத்தில் ஜீலநதியைக் கடந்து திடீர்த் தாக்குதல் செய்த அலெக்சாண்டர் படையெடுப்பு தான் நிகழுமா? அப்படி யாராவது வந்தால் இந்த (கவர்னர்) 'வீரப் புருஷோத்தமன்'கள் தானா "கடந்தடு தானை" நடாத்தி, தளபதியாகப் படையின் முன்னணியில் நின்று அடல்வெம்போர் வென்று வாகை சூடப் போகிறார்கள்? அல்லது மீண்டும் கஜினியும், கோரியும், அலாவுதீனும், பாபரும் களங்காண இயலுமா? இந்த அணுகுண்டு நூற்றாண்டில் இவை எதுவும் நிகழ இடமும் இல்லை; இந்த இப்பராஹீம் லோடிகளுக்கு வேலையும் இல்லை!

—மா. பொ. இராமச்சந்திரன்

கேரளத்தில் இலட்சிய முழக்கம்!

சூடான அரசியல் கட்டுரைகள்
சுவைமிகுந்த நிகழ்ச்சிக் குறிப்புகள்
தலைவர்களின் விளக்க உரைகள்
அனைத்தும் நிறைந்த

'திராவிட நாடு'

(மலையாள மாதம் இருமுறைப் பத்திரிகை)

விலை 2 அணா

இது தி. மு. கழக கேரளமாநிலக் குழுவின் கொள்கைவிளக்க ஏடு!
மலையாள மொழி தெரிந்தோர் ஆதரிக்கவேண்டிய அறப்பணி!

விவரங்களுக்கு :
நிர்வாகி,
'திராவிட நாடு',
c/o திராவிட பப்ளிஷிங் சொசைட்டி,
தம்பானூர், திருவனந்தபுரம்-1.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 1—3—58 ‖ இதழ் 33

தேவகோட்டைத் தீர்மானம்

சென்ற கிழமை தேவகோட்டையில் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டில் திராவிடத்தின் நலன் குறித்து ஏறத்தாழ பதினைந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. டில்லி அரசியலாரின் போக்கினையும் சென்னை அரசியலாரின் அடிமைத் தனத்தையும் கண்டிக்கும் வகையில் தீர்மானங்கள் அமைந்திருந்தன. தி. மு. கழகம் என்றால், பயங்கரமான இயக்கம் என்று கருதிக்கொண்டிருந்த செட்டி நாட்டு மக்கள், மாநாட்டு நடவடிக்கைகளையும், தலைவர்களின் சொற்பொழிவுகளையும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் நேரில் கண்டு, கேட்டு 'நாங்கள் எங்களது தவறான முடிவுகளை மாற்றிக்கொண்டோம்' என்பதை உற்சாகத்தின் மூலமும், கையொலி மூலமும் தெரிவித்தார்கள்.

தென்னாடு எல்லாத் துறைகளிலும் பின் தங்கிக் கிடக்கிறது என்பதை காங்கிரஸ்காரர்களே உணர்வார்கள். அதிலும் இராமநாதபுர மாவட்டம், தமிழகத்தின் மற்ற மாவட்டங்களோடு சமத்துவம் பெறுவதற்குக்கூட வகையற்ற நிலையில் நிலையொடிந்து இருக்கிறது என்பதை எவரும் உணர்வர். இதற்கு மூல காரணம் என்ன ? இராமநாதபுர மாவட்டத்தைப் பொருத்த வரையில் கல்வி வசதி மிகக் குறைவு! உலக நடப்புகளைப்பற்றிப் புரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் அவதிப்படும் மக்கள் இராமநாதபுர மாவட்டத்தில் மிக அதிகம். இந்தக் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு இராமநாதபுர மாவட்டத்தில் சாலை வசதிகளையும், ரயில் போக்குவரத்துகளையும் ஏற்படுத்தியாக வேண்டும். போக்குவரத்து வசதிகள் இல்லாத பகுதிகளில்தான் சாதிச் சண்டைகளும், 'அரசியல் 'ரௌடித்தனம்'களும் நடைபெறுகின்றன என்பதை, சிந்திக்கும் திறன் படைத்தோர் உணர்வார்கள். மேலும் இராமநாதபுர மாவட்டத்தின் அமைப்பே விசித்திரமானது. குதிரை லாடத்தின் அமைப்பும், இராமநாதபுர மாவட்டத்தின் அமைப்பும் ஒரேமாதிரியானவை. தேவகோட்டையிலிருந்து, அதே இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த ராசபாளையத்திற்குப் போக வேண்டுமானால், மதுரை மாவட்டத்தைக் கடந்து, நெல்லை மாவட்டத்தைக் குடைந்துதான் போக வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அந்தந்தப் பகுதிகளில்—முக்கியமான வாணிப நகரங்கள் இருக்கும் பகுதிகளில் ரயில்பாதைகள் இல்லையென்றால் மக்கள் எந்தக் காலத்தில் வளர்ச்சி பெறுவது ? எப்போதுதான் ஜனநாயகத்தின் படிப்பினைகளை உணர்வது ?

தேவகோட்டை மாநாட்டில் இதுபற்றிய தீர்மானம் பெருத்த கையொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தின் சாரம்:—

★ மானாமதுரை—தூத்துக்குடி இருப்புப்பாதை.

★ அருப்புக்கோட்டை வழியாக விருதுநகர்—மானாமதுரை இருப்புப் பாதை.

★ மேலூர், காரைக்குடி, தேவகோட்டை, திருவாடானை வழியாக, மதுரை—தொண்டி இருப்புப்பாதை.

★ திருப்புத்தூர் வழியாக காரைக்குடி—மதுரை இருப்புப்பாதை.

★ நீண்ட காலமாக திட்ட உருவில் மட்டுமே இருந்துவரும் கமுதி—இராசபாளையம் நெடுஞ்சாலை.

இராமநாதபுர மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தப் போக்குவரத்துகளை அரசியலார் ஏற்படுத்துவார்களானால், அந்தப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவி அதன் பயனாய் மக்கள் பெறும் அறிவின் அளவுக்கு அந்த வட்டாரம் விழிப்புப் பெறும். காரணமில்லாமல் கைகட்டி நிற்கும் வாயில்லாப் பூச்சிகளின் அடிமைத்தனமும், 'என் சொல்லைத் தட்டினால் எண் சாண் உடலைப் பொசுக்கிவிடுவேன்' என்னும் தனி நபர் ராஜ தர்பாரும் ஒழிய வேண்டுமானால் தேவகோட்டைத் தீர்மானத்தில் கண்டுள்ள போக்குவரத்துகளை அரசியலார் வெகு விரைவில் ஏற்படுத்தியே ஆக வேண்டும்.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

ளாக இருக்கிறாள். மிருணாலவதி அவர்கள் எல்லோரையுமே தத்துவ ஞானிகளாக்கி வைத்திருந்தாள். விலாசவதிக்குக் காதல் என்றால் என்னவென்றே தெரியாது. சத்யாசிரயனுக்கு தர்மம், போர், தத்துவம், தவம் இவைதான் புரியும்.

தைலபனை விட பீல்லமன் பெரிய வீரன். சந்தர்ப்பவசத்தால் தோல்வியடைந்திருந்தாலும் பலம் குன்றாமல் தைலங்கணத்தில் வாழ்ந்தான். அவனுடைய துணையோடு மாளவத்தின்மீது படையெடுத்த தைலபன் ஒரு வழியாக முஞ்சனைக் கைது செய்துவிட்டான். இதற்குப் பீல்லமனே தான் காரணம். ஆனால் மிருணாலவதி அப்படி நினைக்கவில்லை. பதினாறு முறை தோல்வியடைந்த தன் தம்பிக்குப் புது பலம் ஏற்பட்டதாக அவள் சொல்லிக் கொண்டாள். தம்பியையும் தன்னையும் தவிர மற்றவர்கள் புகழப்படுவதை அவள் விரும்பவில்லை.

முஞ்சன் கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப்படுகிறான் என்றதும் மிருணாலவதிக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. வைராக்கியம் மிகுந்த அவள் மனதில் களிப்பும், கர்வமும் ஏற்பட்டது. துணைக்கண்டம் முழுவதும் மாவீரன் என்று புகழும் முஞ்சனையே அவள் அடிமையாக்கி விட்டாள் என்றால் அதற்குமேல் இன்பம் வேறென்ன இருக்கிறது ! முஞ்சன் கொண்டுவரப்படுவதில் அவனுக்கு மகிழ்வு இருந்தாலும் அரண்மனையில் உள்ளவர்கள் யாரும் அவன் வருவதைப் பார்க்க வேண்டியதில்லை எனக் கருதினாள். ஆனால் பீல்லமன் குமாரி விலாசவதிக்குஅவனைக்காணவேண்டுமென ஆசை. அவன் எப்படி இருப்பான் என்பதைத்தான் அவள் பார்க்க விரும்பினாள். மிருணாலவதி அவள் வேண்டுகோளைப் புறக்கணித்தாள். தந்தையிடம் கேட்டாள் விலாசவதி. மிருணாலவதிக்குக் கட்டுப்பட்டு வாழும் பீல்லமன் மிருணாலவதியைப் போய்ப் பார்த்தான். அவளும் அந்தக் காட்சியைக் காண வேண்டுமென்று வேண்டினான்.

"முஞ்சனைப் போன்ற ஒரு மானிட ரத்தினம் ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறைதான் தோன்றும். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அது கண்களுக்குப் புலப்படும். பதினாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அது கட்டுக்கு அடங்கும். நீங்களும் இந்தக் காட்சியைக் காண வரவேண்டும்" என்றான் பீல்லமன்.

மிருணாலவதிக்குக் கோபம் வந்தது. "நானா?" என்றாள். அந்தக் கேள்வி, சாதாரண மனிதர்களை விட அவள் உயர்ந்தவள் என்பதை உறுதிப்படுத்திற்று. கடைசியில், அவள் முஞ்சன் வருவதைப் பார்ப்பதென்று முடிவு கட்டினாள். அவள் ஒரு அடிமையைத்தானே பார்க்கப் போகிறாள், வெற்றிக் கொலுவில் அமர்ந்து கொண்டு தானே அவனைக் காணப் போகிறாள்; அதுவும் நாட்டின் அரசி, முக்கியமான நேரத்தில் மறைந்திருக்கலாமா ? அதற்காக அவள் இணங்கினாள். அரண்மனையிலுள்ள மற்றவர்களும் முஞ்சனைப் பார்ப்பதற்கு அனுமதித்தாள். மாடத்தில் அமர்ந்திருந்தாள் மிருணாலவதி. அவளுக்குப் பின்னால் மற்றவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கீழ்ப்பகுதி எங்கும் ஒரே கூட்டம். படைகள் வந்தன. மாளவத்தின் கவிஞர்கள் கைதிகளாக வந்தார்கள். படைவீரர்கள் அடிமைகளாகவந்தார்கள். தைலபனும் பீல்லமனும் யானைமீது வெற்றிப் பெருமிதத்தோடு அமர்ந்திருந்தார்கள். பின்னால் முஞ்சன் நடத்திக்கொண்டு வரப்பட்டான். அவன் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. அகன்ற மார்பும் பரந்த நெற்றியும்,நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும்–காண்கிறாள் மிருணாலவதி. அவள் அதில் மயங்கிவிடவில்லை; தளர்ந்துவிடவில்லை. நாலா பக்கமும் நின்றிருந்த போர் வீரர்கள் முஞ்சன் முன்னிலையில் குழந்தைகள்போலத் தோன்றினார்கள். வெற்றிபெற்ற படைகூட முஞ்சனின் புகழை விளக்கிக்காட்டும் அணிகலமாக விளங்கியது. முதுகோடு சேர்த்துப் பூட்டப்பட்ட கைவிலங்கையும் மேலாடையையும் தவிர அவன் உடலில் வேறு அணிமணிகள் இல்லை. ஆயினும் அவனைப் பார்க்கும் கண்கள் பார்த்துக்கொண்டே நின்றுவிடும். அவனுடைய மோகன உருவம் அத்தகையது. இதைப் பார்த்தாள் மிருணாலவதி. அவள் இதயம் கொந்தளித்தது. முஞ்சனுக்கு முன்னால் தான் ஒரு அணுவைப்போல் தோன்றுவதை அவள் உணர்ந்தாள். முஞ்சன் மேலே பார்த்துப் புன்னகை செய்தான். ஊர்வலம் நகர்ந்தது. தைலபனை யாரும் கவனிக்கவே இல்லை. முஞ்சனின் முதுகுப் புறத்தையே அனைவரும் பார்த்தனர். உணர்வு வந்து மிருணாலவதி எழுந்தாள். அவள் வைராக்கியம் கொஞ்சமாகத் தளர்ந்திருந்தது. அதை மீண்டும் கட்டுப்படுத்த அவள் முயன்றாள். அதில் வெற்றியும் பெற்றாள். ஆனால் அந்த வெற்றி எவ்வளவு காலம் நிலைத்தது ? மென்மை உணர்ச்சிகளைத் துறந்துவிட்ட அந்தப் பெண் சிங்கத்தால் அப்படியே இருக்க முடிந்ததா ? முஞ்சன் தோல்வியுற்றவனாக அவள் கண்களுக்குத் தென்பட்டானா ? தோல்வியுற்றவனிடமிருந்த பெருமிதத்தை, வெற்றிபெற்ற அவள் பெறமுடியவில்லையே ஏன் ? இந்தக் கேள்விகளுக்குப் பதிலைக் கண்டுபிடிக்க மிருணாலவதி வெகுசிரமப்பட்டாள்.

ஆனால் நாம் சிரமப்படாமல் அடுத்த இதழில் கவனிப்போம்.

வெண்பாப் போட்டி-12.

ஈற்றடி :

'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

(சிலேடை வெண்பா)

முடிவு தேதி 8-3-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

கல்லின்மேல் எழுத்து !

★ முருகு சுப்பிரமணியன் ★

முதுரை விளக்கம் : 2

'முருகு' அவர்களின் முதுரை விளக்கங்களில் ஒன்ருன 'தண்ணீரும் இளநீரும்' சென்ற இதழில் வெளியிடப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இந்த இதழில் 'கல்லின்மேல் எழுத்து' வருகிறது. இது, 24-1-58 அன்று சிங்கப்பூர் மலாயா வானொலியின் தமிழ்ப்பள்ளிப் பகுதியில் ஒலி பரப்பப்பட்டது.
[ஆ-ர்.]

இன்று உங்களுக்குப் பிடித்தமான ஓர் ஆராய்ச்சி நடத்தப் போகிறேன். எழுத்து ஆராய்ச்சி. உங்களுக்கு இனிக்கும் ஆராய்ச்சியாக இது விளங்கும்.

பள்ளியில் கால் வைத்தவுடன் 'அ' என்று எழுதத் தொடங்குகிறீர்கள் அல்லவா ? அதுபற்றிய ஆராய்ச்சியையே இன்று நாம் நடத்தப் போகிறோம்.

முன்பு-நம் தாத்தா காலத்தில்-பள்ளியில் பிள்ளையைச் சேர்ப்பதென்ருல் பெரிய ஆர்ப்பாட்டம். அது ஒரு கல்யாணம்போலவே நடக்கும். கல்விக்கு அவ்வளவு மதிப்பு தந்திருக்கிருர்கள் முன்னோர்.

எனக்கு நன்கு நினைவிருக்கிறது. பள்ளியில் வைப்பதென்பதே ஒரு சடங்கு, அந்தச் சடங்குக்கு எங்கள் வீட்டில் விருந்தெல்லாம் வைத்திருக்கிருர்கள். வீட்டில் ஓடியாடிக்கொண்டிருந்த என்னைத் திடீரென ஒரு நாள் ஏட்டு மூட்டையைத் தோளில் தூக்கிக்கொண்டு பள்ளிக்குப்போகச் சொன்னுல் எப்படியிருக்கும் !

தாத்தா முதுகிலும், மாமா தோளிலும் சவாரி செய்தவன் நான். என்னுடைய சின்னத்தோளில் கரும்பலகை, புத்தகம் அடங்கிட அழகான ஒரு பின்னல் பையைத் தொங்கவிட்டார்கள். ராஜகுமாரன் மாதிரி என்னைச் சிங்காரித்தார்கள்.வீட்டிலிருந்தநகைகளையெல்லாம் எனக்குப் பூட்டினுர்கள் / அப்பொழுது நான் சின்னவன். பள்ளிக்கூடத்திற்கு இத்தனை தர்பாரோடுதான் போக வேண்டும்போலும் என்று நினைத்துக்கொண்டேன்.

அடுத்த ஊரிலிருந்தும் அண்டை வீடுகளிலிருந்தும் உறவினர்கள் வந்திருந்தனர். மேளகாரரும் வந்திருந்தார். நல்ல நேரம் பார்த்து எங்கள் வீட்டிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டோம். குறைந்தது ஐம்பது பேராவது இருக்கும். படிக்கப் போவது நான். என்னைச் சுற்றி இத்தனை பேர் !

எனக்கு ஒரே உற்சாகம்; எல்லோரும் பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். நாகசுரம், மேளம், தாள சப்தங்கள் ஓய்ந்தன. 'தம்பி, இங்கே வா' என்று பெரியவர் ஒருவர் என்னை அன்பாக அழைத்தார். அன்போடு சிறிது அதிகாரமும் அவர் குரலில் தொனித்தது. சரி; அவர்தான் நம்முடைய அருமை ஆசிரியர் என்று தெரிந்துகொண்டேன். வேட்டியைப் பஞ்சகச்சம் வைத்துக் கட்டியிருந்தார். தோளில் ஒரு கெண்டைத் துண்டு மடித்துப் போட்டிருந்தார். வெள்ளெழுத்துக்கு அடையாளமாக நூலில் கட்டிய மூக்குக் கண்ணுடி. தலையின் உச்சியில்ஐந்தாறுவெள்ளிக் கம்பிகள் !

எனக்காகப் புதிய ஆற்று மணல் போட்டுப் பரப்பி வைத்திருந்தார்கள். ஆசிரியர் என்னை உட்காரச் சொன்னுர். என் கைவிரலைப் பிடித்து மணலில் 'அ' எழுதினுர். இரண்டு மூன்று தடவை நான் அந்தப் பெரிய 'அ'வை விளம்பினேன். எனக்குக் கல்வி பயிற்றல் தொடங்கிவிட்டதற்கு அறிகுறியாக அன்று பள்ளியில் எல்லாப் பிள்ளைகளுக்கும்ஒவ்வொருதொன்னை சீனி !

அந்தக் காலம்

இப்படி மணலில் கைவிரல் தேய எழுதியது அந்தக் காலம். இப்பொழுது பள்ளிகளில் இந்தக்காட்சியைக் காணமுடியாது.

சிலேட்டுப் பலகை இருக்கிறது, கரும்பலகை இருக்கிறது. நோட்டுப் புத்தகம் இருக்கிறது-இவற்றிலேயே இப்பொழுது குழந்தைகள் 'அப்பா' 'அம்மா' என்று எழுதிப் பழகுகிருர்கள்.

சிலேட்டுப் பலகையில் கற்குச்சி கொண்டு அருமையாக எழுதலாம். கரும்பலகையில்சுண்ணக்கட்டியால் ஆசிரியர் பாடங்களை எழுதிக் காட்டுவார். நோட்டுகளில் பென்சிலாலும் பேனுவாலும் எழுதுவதே மிகுதி. இன்று பென்சிலும் பேனுவும் எத்துணையோ புதுமையாக வளர்ந்துவிட்டன !

மணலைப் பரப்பி, விரல் தேய எழுதிய காலம் ஓடிப் போய்விட்டது. இப்பொழுது தங்க மூடி போட்ட 'பார்க்கர்' பேனுவினுல், கண்ணைப் பறிக்கும் வெள்ளைத் தாளில் எழுதுகிறோம்.

எழுத்து மொழிக்கு அடிப்படை. ஒரு மொழியைப் பயில்வதற்கு நாம் முதலில் எழுத்துக்களையே தெரிந்து கொள்கிறோம். பிறகு எழுத்துக்களால் அமைந்த சொற்களைப் பயில்கிறோம். பின்னர் சொற்றொடர்கள்— இவ்வாறு எழுத்திலிருந்து நம் கல்வி தொடங்குகிறது.

ஔவையார் எழுத்தைப்பற்றிச் சொல்கிருர். இரண்டு விதமான எழுத்துக்களை அவர் குறிப்பிடுகிருர்.

ஒன்று கல்மேல் எழுத்து; மற்றொன்று நீர்மேல் எழுத்து. இரண்டுமே உங்களுக்குப் புதுமையாகத் தோன்றும்.

'கல்லின்மேல் எழுதுவதா ? எப்படி ?' என்று கேட்பீர்கள். கல்லின்மேல் எழுத்துக்களைப் பொறிப்பது பழங்கால வழக்கம். இப்பொழுதும் இம்முறை சில சமயங்களில் கையாளப்படுவது உண்டு.

பள்ளிக்கூடம் புதிதாகக் கட்டினுல், அதில் ஒரு சலவைக் கல்லைச் சுவரில் பதித்து அந்தக் கல்லில் பள்ளிக்குப் பணம் உதவியவர் பெயர், அஸ்திவாரமிட்ட நாள், திறப்புவிழாத் தேதி, திறந்து வைத்தவர் பெயர் முதலிய விவரங்களைப் பொறித்து வைப்பார்கள். இது இன்றும் நாம் பார்க்கக்கூடியது.

கல்லில் எழுதுவது மன்னர்கள் கையாண்ட முறை. இப்பொழுதுள்ளதுபோல், முன்பு புத்தகம் அச்சிடவும் பேணி வைக்கவும் வசதி கிடையாது. ஆகவே, கற்களில சரித்திரக் குறிப்புகளையும் கட்டளைகளையும் பொறித்து வைத்தார்கள். இன்று நாம் கல்வெட்டு என்று தேடியெடுத்து ஆராய்கின்றவை பழங்காலத்தில் எழுதி வைத்த சாசனங்களே !

கல்வெட்டுக்கள் ஒரு நாட்டின் வரலாற்றினை அறிவதற்குப் பெருந்துணை புரிகின்றன, அசோகன் தமிழகத்தில் புத்தசமயத்தைப் பரப்பியதைக் கல்வெட்டிலிருந்தே நாம் அறிகிறோம். மலை நாட்டில் சோழர்கள் ஆட்சிபுரிந்திருக்கின்றனர் என்பதற்குக் கல்வேட்டுக்களே சான்று.

கல்லில் பொறித்தனர்

ஏட்டில் எழுத்தாணி கொண்டு இலக்கியங்களை எழுதி வைத்தவர்கள்,என்றும் அழியாதபடி, பல குறிப்புகளையும் செய்திகளையும் கல்லில் பொறித்து வைத்தார்கள்.

கல்லில் பொறிக்கும் எழுத்து காலத்தைக் கடந்து நிற்கும். எத்தனையோ ஊழிகளுக்குப் பிறகும் நாம் அதனைப் படிக்கமுடியும். காற்று, மழை, வெய்யில் முதலான இயற்கையின் கோலங்கள் கல்வெட்டுக்களை அதிகம் பாதித்துவிடமாட்டா.

மணலில் எழுதுவதோ, சிலேட்டில் எழுதுவதோ, ஏட்டில் எழுதுவதோ, நோட்டில் எழுதுவதோ ஏதும் நிலையானவை அன்று. மணலில் எழுதுவது, நாம் எழுதும்போதே கலைந்துவிடும். சிலேட்டிலோ கைபட்டால் எழுத்து மறையும். பனையேடு கால முதிர்ச்சியில் மக்கிவிடும். பிறசாதனங்களும் அப்படியே !

வெள்ளத்திற்கும் வெந்தணலிற்கும் தப்பி நிற்பவை எவை ? மாறுகின்ற ஆட்சியிலும், படையெடுப்பு நிகழ்ச்சியிலும் அழியாது நிலைத்திருக்கக்கூடியவை எவை ? பல்லூழி காலத்திற்குப் பிறகும் அழியாதிருக்கவல்லவை எவை ? அவை கல்வெட்டுகளே என்று பழந்தமிழர் கண்டனர். கல்லில் பொறித்து வைத்தால் அவை உலகுள்ளளவும் மாந்தர் உள்ளளவும் நிலைத்திருக்கும் என்று கண்ட அவர்தம் அறிவுக் கூர்மையின் சிறப்பை என்னென்போம் !

கல்மேல் எழுதுவது கல்வெட்டு என்று கூறப்படுகிறது. கல்வெட்டாகப் பேசுகிருன் என்ருல் உறுதியாகப் பேசுகிருன் என்று பொருள்.

முதுரை கல்வெட்டைப் பற்றிப் பேசுகிறது; கல்லின்மேல் எழுதுவதைப் பற்றிப் பேசுகின்ற அதே நேரத்தில் நீர்மேல் எழுதுவது பற்றியும் அது குறிப்பிடுகிறது.

கல்மேல் எழுத்து இப்பொழுது உங்களுக்குத் தெரியும். ஆனுல் நீர்மேல் எழுத்து புதுமையாக இருக்கிறதல்லவா ? ஆம் ! அது புதுமையான எழுத்துத்தான் !

ஒரு தொட்டியில் தண்ணீரை நிரப்பிக்கொள்ளுங்கள். கைவிரலினுல் அத்தண்ணீர்ப்பரப்பில் 'அப்பா', 'அம்மா' என்று எழுதுங்கள். அந்த எழுத்து நீங்கள் எழுதுவதற்கு முன்பே மறைந்துவிடும்.

மணலில் எழுதினுல் சிறிதுநேரமாவது இருக்கும்; சிலேட்டிலும் கரும்பலகையிலும் கைபட்டு அழியும் வரை எழுத்துக்களைப் பார்க்கமுடியும். நோட்டு, புத்தகம் முதலியவற்றில் உள்ள எழுத்துக்கள் பல ஆண்டுகள் வரை அப்படியே இருக்கும். ஏட்டில் எழுதுவதை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப்பிறகும் படிக்கமுடியும். பென்சிலால் எழுதுகின்ற எழுத்து ரப்பரால் அழித்தால் மட்டுமே மறையும்.

ஆனுல் தண்ணீரின்மீது எழுதுகின்ற எழுத்தோ, மறு எழுத்தை நாம் எழுதுவதற்கு முன்பே மறைந்துவிடும் ! 'கண்ணுடி' என்னும் சொல்லைத் தண்ணீரின்மீது எழுதுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். 'க' என்று எழுதிவிட்டு, 'ண்' என்னும் அடுத்த எழுத்தை எழுதுவதற்கு முன்பே 'க' மாயமாய் ஓடிவிடும். நீரில் எழுதுகின்ற எழுத்தின் இயல்பு இது.

அவன் பேச்சைத் தண்ணீரிலேயே எழுதிவைக்க வேண்டும் என்று சொல்லுவார்கள்.'உன்வார்த்தையை ஓடுகிற தண்ணீரில் எழுதுவதா, நிற்கிற தண்ணீரில் எழுதுவதா ?' என்று கிண்டல் செய்வார்கள். அதாவது அவன் சொன்னபடி செய்யமாட்டான் என்று பொருள். ஆனுல்

— 9ம் பக்கம் —

தமிழை வளர்ப்பது எப்படி

ஏ. வி. ராமன்

பிற நாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய
புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்
—பாரதியார்

மேலும், மேற்கே வளரும் புத்தம் புதிய கலைகள் தமிழினில் இல்லையென்றும், அந்தக் கலைகளை சொல்லவுங் கூடுவதில்லையென்றும், அவைகளைச் சொல்லும் திறமை கூடத் தமிழ் மொழிக்கில்லையென்றும் சிலர் கூறுவதாக ஏங்கினர் பாரதியார்.

முதற் கடமை

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்ப் படுத்த வேண்டுமென்றால் சாதாரணமாக வழங்கிவரும் ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான, நேரான தமிழ்ச் சொற்கள் வேண்டும். சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் எழுத முடியும்? வெறுங்கை முழமிடுமா? அதுபோல ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான, நேரான தமிழ்ச் சொற்கள் இல்லாவிட்டால், பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை எப்படித் தமிழ்ப் படுத்த முடியும்? ஆகையால், தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் முதன் முதலாக ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தொகுத்தல் வேண்டும். தமிழ் வளர்ச்சியைப்பற்றிப் பேசுவது ஒரு புறமிருக்கட்டும். தக்க தமிழ்ச் சொற்களைத் தொகுக்க முன் வருவதே அவர்களைப் பொறுத்த முதற் கடமையாகும். மேலும், ஓர் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ் மொழியில் ஏட்டு வழக்கிலும், பேச்சு வழக்கிலும் எத்தனை தமிழ்ச் சொற்கள் உள்ளனவோ அச்சொற்களனைத்தையும் பொறுக்கியெடுத்துத் தொகுத்துவிட வேண்டும். எடுத்துக் காட்டாக, ஓர் ஆங்கிலத் தொகைச் சொல்லுக்கு (Compound) நேரான தமிழ்த் தொகைச் சொல்லை அமைக்கப் பொருத்தமான இரண்டு மூன்று தமிழ்ச் சொற்களை இணைத்துக் கூற வேண்டி வரும். அப்படி இணைப்பதில் தமிழ் மாண்பு பெறும். தமிழும் வளமுறும். கருத்தும் தெளிவுபடும். கேட்கின்ற அல்லது படிக்கின்ற தமிழன் செவிக்கும் இன்னொலியைத் தரும்.

மேற் கூறியவற்றையே அனைவரும் வழி முறை விதியாகக் கொள்ளல் வேண்டும். அப்படியிருக்க, இந்நாள் தமிழ் எழுத்தாளரிற் சிலர் அறிய தமிழ்ச் தொடர்களை நவீன விசுவாமித்திர சிருஷ்டியாகப் படைத்துப் பதிப்பித்துமிருக்கிறார்கள். (Football) 'புட்பால்- அடிபந்து இதை ஏன் 'உதை பந்து' என்று' சொல்லக்கூடாது? உதைப் பந்தன்று. உதை பந்தேதான்.

(Woman Thief) என்பதற்கு பெண்/ திருடன் என்று மொழி பெயர்த்து ஒரு பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். 'திருடி' யென்ற தமிழ்ச் சொல்லை அறியாத தமிழர் உண்டா? 'பெண் திருடன்' என்னும் தொடரைப் பார்த்து யார் தான் விழுந்து விழுந்து சிரிக்க மாட்டார்கள்? தமிழ் மரபை அறியாமல் இப்படியுந் தமிழை வளர்க்கலாமா?

3. (Professicnal Training) என்பதற்கு 'உத்யோகப் படிப்பு' என்று மொழி பெயர்ப்பது எந்த வகையிலாவது பொருந்துமா? 'தொழிற் பயிற்சி' என்னும் எவருமறிந்த தமிழ்த் தொடரை எடுத்தாளலாகாதா?

4. (Good Friday) என்பது 'நல்ல வெள்ளிக்கிழமை' என்று மொழிபெயர்த்து பத்திரிகைகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குச் சரியான தமிழ்த்தொடர் 'பெரிய வெள்ளிக்கிழமை' யெனத் தொன்று தொட்டு வழங்கி வரவில்லையா?

5. (Folk Dance) இதனை 'கிராமிய நடனம்' என்று ஒரு முதன்மையான தமிழ்ப்பத்திரிகை மொழி பெயர்த்து அச்சிட்டிருக்கிறது. கிராமியம்' என்னுஞ் சொல், 'கொச்சை மொழி' 'இழிவான பேச்சு, 'அவையல் கிளவி' என்றல்லவோ பொருள் தருகின்றது! 'நாட்டு நடனம்' என்று சொன்னால் எவ்வளவு பொருத்தமாயுந் திருத்தமாயுமிருக்கும்?

6. (Military Training) என்பதை இராணுவப் பயிற்சி என்று தமிழ்ப் படுத்துகிறார்கள். 'படையூற்றம்' என்னும் அரியதொடரைக் கம்பர் எடுத்தாண்டிருக்கிறார். கம்ப நாட்டாரின் கவிதையைப்பற்றி பேசுபவர்களும் எழுதுபவர்களும் 'படையூற்றம்' என்னுந் தொடரைக் கூட அறியாமல் ஏற்றமும் பெறுகின்றார்களே?

7. (Garden Party) என்பதை பலரறிந்த ஒரு தமிழ்ப் பத்திரிகை 'தோட்டக் கச்சேரி' என்றுதுணிந்து கூறுகிறது. 'வன போஜனம்' என்னுந் தொடர் வடமொழியாக இருந்தாலும் சாதாரணமாக அனைவரும் அறியக்கூடிய தொடரல்லவா? இத்தகைய மொழி பெயர்ப்புக்கள் கண்மூடித்தனமானவை.

8. (River Valley Schemes) என்னும் இத்தொடர் இந்நாளில் வெகுவாய் அடிபட்டுவருந் தொடர்களுள் ஒன்று. அத்தொடரை 'நதி தீர திட்டங்கள்' எனப் பத்திரிகைகள் எழுதி வருகின்றன. அத்தொடர்தான் பொருத்தமானது என அ. இ. ரே. அதிகாரிகளும் எடுத்தாண்டு வருகிறார்கள். தீரம் என்றால் 'கரை' அல்லது 'செய் வரம்பு' எனப் பொருள் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் வெளிவந்த கலைக் களஞ்சியத்தில் இந்த ஆங்கிலத் தொடருக்கு 'ஆற்றுப் பள்ளத்தாக்குகள்' என்று தமிழ்ப் படுத்தியிருக்கிறார்கள். (Time table) என்னுந் தொடரைக் 'கால வோசை'யென்று மொழி பெயர்த்தால் எப்படியிருக்கும்? "நதி தாக்குத் திட்டங்கள்" என்று சொன்னால் கருத்துத் தெளிவாகவில்லையா?

9. (The village is the backbone of the country) என்னும் ஆங்கில வாக்கியத்தைக் 'கிராமமே தேசத்தின் முதுகெலும்பு' என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். இப்படி மொழிபெயர்க்க முன் வந்ததும் ஒரு பிரபல தமிழ்ப் பத்திரிகை தான். 'கிராமமே நாட்டின் உயிர் நாடி' என்று சொன்னால் எவ்வளவு பொருத்தமாக விருக்கும்?

(Provision for the rainy day) என்ற ஆங்கிலத் தொடர் ஒருவன் மூப்பாலோ அல்லது வேறு காரணத்தாலோ தளர்ந்த காலத்தில் அவனுக்கு உதவிசெய்யும் நிதி என்னும் பொருளைத் தருகின்றது. இத்தொடர்க்கு 'எய்ப்பினில் வைப்பு' (பழமொழி 358) என்னும் தமிழ்த் தொடர் எவ்வளவு பொருத்தமாகவும் நேராகவும் தெளிவாகவும் அமைந்திருக்கின்றது! பிற்காலத் தொளி வீசிய தாயுமானாரும் தம் பராபரக் கண்ணியில் 'அப்பா வென் வெய்ப்பில் வைப்பே' என ஆள்கின்றார்.

"Death-knell" என்பது இந்தியர் ஆக்கிய ஆங்கிலத் தொடர். Knell என்னும் சொல் மேற்றிய தொடரின் பொருளை விளக்கப் போதும். Knell என்பதுதான் தனியாங்கிலம்.

Death-bell, Dead-bell என்னும் வழக்கும் உண்டு. இந்த Death-knell என்னும் தொடரை 'சாவு மணி' என்று சிலர் மொழி பெயர்க்கிறார்கள். இதற்குச் சரியான தமிழ்த்தொடரை நாம் பேச்சு வழக்கிலிருந்தும் ஏட்டு வழக்கிலிருந்தும் தான் எடுத்தாள வேண்டும். 'சாவு மணி' என்பது நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்குச் சிறிதும் பொருந்தாத தொடர். ஒருவர் செத்தால் நாம் மணியடிப்பதுமில்லை. மேனாட்டார் ஒரு கிருத்தவன் இறந்தபோது அருகிலுள்ள கோயில் மணியை இழவோசை என்று பிறர் அறியும் வண்ணம் அடித்துத் தெரிவிப்பார்கள். அந்தப் பழக்கத்தை நம் நாட்டிலும் கிருத்தவர்கள் தாம் பின்பற்றி வருகிறார்கள். நம் நாட்டில் ஒருவன் இறந்தபோது பறையடித்தலே தொன்று தொட்ட வழக்கம். பிணப் பறை அல்லது சாப்பறை என்னுந் தொடர்களால் இது நன்கு விளங்கும். 'ஓர் இல் நெய்தல் கறங்க ஓர் இல் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப' (புறம் 194) என்னும் ஆட்சியும் இதனை வலியுறுத்தும். 'நெஞ்சு ... குறூஉ நெய்தலோசையும்'! (மணி 6: 71) என்னுந் தொடரை ஆய்ந்து பார்க்கும்போது "Death-knell" என்னும் ஆங்கிலத் தொடருக்கு "நெய்தலோசை" "நெய்தற்பறை" "நெய்தல் முழக்கம்" என்னுந் தொடர்களே பொருத்தம் என்பது நன்கு விளங்கும். சாப்பறை என்றார் பரிமேலழகர். (குறள் 1115) 'விழுந்தான் கொட்டு' எனத் தமிழகராதிகூறும். 'சாக்கொட்டு' என்ற வழக்கும் உண்டு. இவ்வளவு தமிழ்த்தொடர்களைக் கைவிட்டுச் சாவுமணி என்று மொழி பெயர்ப்பவர்களுக்காக நான் பெரிதும் வருந்துகின்றேன். அவர்களுக்கு நல்ல தமிழறிவில்லாமையே இதற்குக் காரணம். தமிழறிவிருந்தால் இத்தொடர்களை கைநழுவ விடுவார்களா? குருடனை இராஜ விழி விழிக்கச் சொல்வதின் பயனிது. இரண்டு மொழிகளிலாவது முற்றிய புலமையில்லாதவர் இப்பணியில் தலையிடக்கூடாது. என்றாலும், இந்தப் புல்லுருவங்களைக் கண்டு நான் பெரிதும் அஞ்சுகின்றேன். அவர்கள் தாம் தமிழின் தனிப் பெருமையையைக் குறைத்து விடுகிறார்கள்.

இப்படியாக, உதாரணங்கள் அடுக்கிக்கொண்டே போகலாம். தமிழ் வளர்ச்சியைக் கருதி இத்தகைய மொழிபெயர்ப்புகளைத் திணித்தால் தமிழ் மொழிக்குத் தீமையன்றி நன்மை ஒரு காலும் ஏற்படாதே. ஓட மருந்துண்டு உறங்கி விழுவாரைப்போல் அல்லவா இத் துணிச் செயல் காணப்படுகிறது!

இனி, தனி ஆங்கிலச் சொற்கள் மொழிபெயர்க்கப் பெற்ற முறையையும் இரண்டொரு உதாரணங்களால் சுட்டிக்காட்டி விளக்குவேன். (1) DIVORCE என்பதை 'விவாக ரத்து' என்று நமது தமிழ் எழுத்தாளர்கள் மொழி பெயர்த்திருக்கிறார்கள். 'விவாகம்' வட மொழி. 'ரத்து' என்பது அராபிய மொழி. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போலல்லவா இருக்கின்றது! தமிழில் 'அறுத்து முறி' என்னுந் தமிழ்த் தொடர் ஆளுவாரில்லாமல் பதுங்கிக் கிடக்கின்றது. 'துரும்பு வாங்குதல், 'துரும்பு கொடுத்தல்' என்னுந் தொடர்களும் எடுத்தாளப் பெறுமல் மறைந்து கிடக்கின்றன. (2) NURSE என்னும் ஆங்கிலச் சொல்லை 'நர்சு' என்றே தமிழ் எழுத்தில் எழுதி விடுகிறார்கள். கண்டபடி புதிய தமிழ்ச் சொல்லொன்றைக் கற்பியாமல் அப்படியே எழுதிவிடும் முறை ஒருவாறு பொருத்தமாயினும், குறளாசிரியர் 'மருந்து' என்னும் அதிகாரத்தின் கீழ் 'உழைச் செல்வான்' என்ற அரிய தமிழ்த்தொடரை ஆண்டிருக்கிறார். திருக்குறளைக் கையாள்கிறவர்கள் கண்கவரும் அரிய

— 10ம் பக்கம் —

குஞ்சாக்கின் கதை

சிங்கப்பெருமாள் நல்ல போதையில் இருந்தார்.

'முதலாளி முதலாளி'—என்று பதறிக்கொண்டு ஓடிவந்த மான் கொம்பு சிங்கப்பெருமாளின் காலில் விழுந்தான்.

''மான்கொம்பு, என்ன ரத்தம்? வேட்டைக்குப் போனுயா? காட்டுப் பன்றியின் நகக்கீரல்களா?'' என்று பதட்டமில்லாமல் கேட்டார் சிங்கப் பெருமாள். போதையில் இருப்பவர் கள் சின்ன விஷயத்தைப் பெரிதாக் கிப் பேசுகிருர்கள்; பெரிய விஷயங் களை அலட்சியப்படுத்திவிடுகிருர்கள்.

''முதலாளி, உண்ட வீட்டுக்கு இரண்டகம்! மான்கொம்பு மானஸ் தன்! மேனியைப் பாருங்கள், வெட் டும் குத்தும்!''

''மான்கொம்பு! புலம்பாதே! என்ன நடந்தது? எதிரிகள் தாக்கி விட்டார்களா?''

''விருந்துக்கு வந்திருக்கும் வெள் ளைக்கார அதிகாரிகள் செய்த தீவினை முதலாளி இது! கறியும் மீனும் போதாதென்று, தெற்கித்திக் கள்ள னின் மானத்தையும் கேட்கிருர்கள் முதலாளி! உங்களுக்காகப் பார்க் கிறேன், இல்லையேல் இந்த ஊரையே தீ வைத்துப் பொசுக்கியிருப்பேன்!''—மான்கொம்பு குமுறினன்.

''மான்கொம்பு! நெஞ்சைக் குழப் பாதே! நடந்ததைக் கூறு!''

''கூசுகிறது நாக்கு!''

''கள்ளர் குலத்திற்கு அவமானம்!''

''அவமானம் எனக்கல்ல முத லாளி! இந்த விருந்தை நடத்தியவர் களுக்கு!''

''எதிர்த்தா பேசுகிருய்? எச்சில் இலை நாயே!''

''மன்னிக்க வேண்டும்! விருந் துக்கு வந்தவர்கள் வீடு புகுந்து பெண்களைக் கெடுக்க முயன்ருர் கள்.''

''யார் வீட்டில் புகுந்தார்கள்?''

''என் வீட்டில் புகுந்தார்கள் முத லாளி! என் நெஞ்சு கொதிக்கிறது—என் மகள் **பூவாத்தாவின்** கன்னத் தைக் கடித்துக் காயப்படுத்தி விட் டார்கள்! முதலாளி, மான்கொம்பு இனிப் பொறுக்கமாட்டான். வாழ்வும் வளமும் எனக்குத் தேவையில்லை. **மானம் எனக்குப் பிரதானம்!** அங்கே மகளுக்கு அவமானம்! இங்கே தந்தைக்கு ரத்தக்காயம்! முதலாளி என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்குத் தரவேண்டிய கௌர வத்தின் இறுதிப் படிக்கட்டில் நின்று கேட்கிறேன்; இதற்கு நீங்கள் தலை யசைத்தால் தப்பித்தீர்கள். இல்லை யென்ருல் இந்த மான்கொம்பு, உங் களையே எதிர்க்கும் 'புலிநக'மாக மாறுவான்! ஒரே ஒரு வீர வாலிபன் எனக்குத் துணை நின்ருன்! அதனுல் நான் பிழைத்தேன்! கள்ளர் நாட் டில், காசுக்கு ஆள் கிடைப்பதைப் போல், மானத்தின் பேரால் பதின் மடங்கு வீரர்கள் கிடைப்பார்கள்!''—மான்கொம்பு அனலைப் பொழிந்தான்.

சிங்கப்பெருமாளுக்குப் போதை தெளிய ஆரம்பித்தது. போதை தெளிந்தால் குணம் மாறும் என்று மான்கொம்பு எதிர்பார்த்தான். சுக வாழ்வுக்கும் சுயமரியாதைக்கும் பன் னெடுங்காலமாகத்தான் போராட்டம் நடந்துகொண்டு வருகிறது. இந்தப் போராட்டத்தில், வாழ்க்கையையே பெரிதெனக் கொண்டவன் வெற்றி பெற்ருலும் அதனுல் கிடைக்கும் வாழ்வு அவனிடம் நீண்ட நாட் களுக்கு நிலைப்பதில்லை. ஆனுல் சுய மரியாதைக்காகப் போரிட்டவன் வெற்றி பெற்ருலும், தோல்வியடைந் தாலும் உலகம் அவனை மதிக்கிறது. இதயநிறைவு அவனைச் சுகவாழ் வுக்கு அழைத்துச் செல்கிறது. இந்த உண்மையை உணர்ந்தவர் கள், சுகவாழ்வுக்காக சுயமரியாதை யை இழக்கவே துணியமாட்டார்கள். சிங்கப்பெருமாளுக்கு இந்த உண் மை அவ்வளவு எளிதிலே புரிந்து விடுமா? அவர் போக போக் கியத்தில் மிதந்துகொண்டு இருப்பவ ராயிற்றே!

''மான்கொம்பு, எத்தனையோ தக ராறுகளில் நீ எனக்கு சமாதானம் சொல்லியிருக்கிருய்; இன்றுஉனக்கே நீ சமாதானம் சொல்லிக்கொள்ள முடியவில்லை!''

''முதலாளி, இது வரப்புச்சண் டையா, வாய்க்கால் சண்டையா? தமிழச்சியின் மானப் பிரச்சினை! சோதிக்காதீர்கள்!''

தென்னரசு

''மான்கொம்பு என்ன மிரட்டு கிருய்? வந்தவர்களை கௌரவப் படுத்த வேண்டுமானுல் நாம் பொறுமையாகத்தான் இருக்கவேண் டும்!...போ!''

அப்போது ஒரு வாலிபன் அங்கு ஓடிவந்தான்!

''மான்கொம்பு, இவரிடம் என்ன பேச்சு! அங்கே அக்காள் பூவாத் தாள் தூக்கிட்டுக்கொண்டு செத்து விட்டார்கள்! சிங்கப்பெருமாளுக் குக் கொடுத்த மரியாதை போதும்'' என்று கர்ஜித்தான் அந்த இளைஞன்.

மான்கொம்புக்கு ரத்தம் கொதித் தது. உடம்பு நடுக்கம் கண்டது.

— 10ம் பக்கம் —

- 14 -

"சார் - சார். மறுக்காதீர்கள். இது ஒன்றும் தப்பு இல்லே சார். சும்மா ஒப்புக்கொள்ளுங்கள். அவர்கள் போய்விடுவார்கள். இல்லாவிட்டால், உங்களுக்கு, இந்தப்பெண்ணுக்கு, எங்களுக்கு எல்லோருக்கும் ஆபத்து தான் சார்-சார். கொஞ்சம் வேறு வழியில்லே சார்-சீக்கிரம்" என்று கெஞ்சிக் கதறினன்.

ஞானசம்பந்தன் ஒருகணம் எண்ணிப்பார்த்தான். ஆமாம். ஒப்புக்கொள்ளாவிட்டால் நாளை நான் வழக்குமன்றில் நிற்க வேண்டும். கேவலம் இதைச் செய்தித்தாள்களிலும் போட்டு விடுவார்கள். பிறகு யார் முகத்திலும் விழிக்கமுடியாதே. ஒப்புக்கொண்டால் ஒன்றும் இல்லே. ஒருகணம். ஒரே கணம்தானே - என்று எண்ணினன்.

"சரி போ ஐயா" என்றுன்.

"உங்கள் பெயர் அருணசலம் உங்கள் ஊர் மேட்டூர். இந்தப் பெண் - அமுதவல்லி - உங்கள் மனேவி. வரும்போது சொல்லுங்கள் சார்" - என்று, சொல்லிவிட்டுப்போனுன்.

அவன் போனபின் ஞானசம்பந்தனின் மனம் ஒரு நிலேயில் இல்லே. ஏதேதோ எண்ணிக் குழம்பினன். என்ன வேலே இது என்று சலித்துக்கொண்டான். சீச்சி ஏகாம்பரத்தால் அல்லவா இந்த இன்னல் என்று அவனே நொந்துகொண்டான்.

அமுதவல்லி ஓடிவந்து அவன் கையைப் பற்றிக்கொண்டு "என்னுல்தானே இவ்வளவும்" என்றுள்.

"ஒன்றுமில்லே. இதிலே என்ன இருக்கிறது. ஒருகணம் தானே" என்று சொல்லிவிட்டு இப்படியும் அப்படியும் நடைபோட்டுக் கொண்டு இருந்தான்.

'டக்டக்' என்று கதவு ஒலித்தது. உள்ளேயிருந்து விடைவராமல் போகவே மீண்டும் 'டக்டக்' ஒலி கேட்டது. இம்முறை சற்று வேகமாகவும் இருந்தது.

"யார் அது?" என்று ஞானசம்பந்தன் கதவைத் திறவாமலே கேட்டான்.

"தயவுசெய்து திறவுங்கள்."

'யார் அது இந்த நேரத்தில்" என்றுமுணகிக்கொண்டே ஞானசம்பந்தன் வந்து கதவைத் திறந்தான்.

மனதை உறுதிப்படுத்திக் கொண்டான் என்ருலும், அந்த நள்ளிரவு நேரத்தில் பெருங் குற்றத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததால் அச்சம் அவனேக் குடைந்துகொண்டிருந்தது.

"என்ன சார்? யார் வேண்டும்?" என்று எப்படியோ கேட்டுவிட்டான்.

"உங்கள் பெயர்?"

"அருணுசலம்."

"ஊர்?"

மேட்டூர்.

"உள்ளே யார்?"

"என் மனேவி."

"பெயர்?"

"அமுதவல்லி."

"சரி. இப்படி ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக்கொடுங்கள்."

"ஸ்டேட்மெண்ட்டா? ஏன்"

"இந்த ஒட்டலேப் பற்றி வேறு விதமாக எங்களுக்குச் செய்தி கிடைத்தது. அதனுல் இப்படித் திடீர் என வந்து சோதனே இட்டோம். நீங்கள் கணவன் மனேவி என்று ஒரு எழுத்து எழுதிக் கொடுத்துவிட்டால் அது எங்களுக்கு நல்லது."

"என்ன சார் இது வேடிக்கையாக இருக்கிறதே. உங்களுக்கு நல்லது என்று நான் ஸ்டேட்மெண்ட் எழுதவேண்டுமா?"

"இல்லாவிட்டால் நான் உங்களே இப்போது விபசாரக்குற்றத்தின்கீழ் கைது செய்யவேண்டும். நீங்கள் வழக்குமன்றில் வந்து வாதாடி நியாயம் பெறவேண்டும். ஏன் சார் இந்த வம்பு" என்றுர் அந்தப் போலீஸ்காரர்.

ஞானசம்பந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லே. போலீஸ் - விபசாரம்-சட்டம் – வழக்குமன்றம்- தண்டனே அவமானம், இந்தச் சொற்கள் அவன் சிந்தையில் சுழன்றன.

"சரி ஐயா. எழுதிக்கொள்ளுங்கள்" என்று சொன்னுன். நொடியில் எல்லா வேலேயும் முடிந்து போலீஸ்காரர்கள் போய்விட்டனர்.

அதற்குப்பின் அங்கு தங்க ஞானசம்பந்தன் விரும்பவில்லே. தன் அறைக்குப் போக வேண்டும் என்று எண்ணினன்.

மூலே ஆளேக் கூப்பிட்டு "டாக்சி ஒன்று கொண்டுவா" என்று கட்டளே இட்டுவிட்டு அறைக்குள் போனுன்.

அமுதவல்லி அவனிடத்தில் வந்து பேச்சைத் தொடங்கினுள்:

"உடனே போகிறீர்களா?"

"உம்."

"ஏன்?"

"......"

"என்மேல் ஒன்றும் தப்பில்லே. என் நிலே அப்படி."

"உன் கணவனு அவன்."

இதைக் கேட்டதும் அவள் கண்கள் மறுபடியும் கலங்கின. எங்கே மீண்டும் தேம்பும் படலம் தொடங்கிடுமோ என ஞானசம்பந்தன் எண்ணினன். ஆனல் அவள் தேம்பிக்கொண்டிருக்கவில்லே.

"என் கணவன் அல்ல - கயவன்-மடையன்."

"உனக்கு அவன் கணவன் என்று எழுதியிருக்கிறதாமே."

"எதுவும் எழுதுவான் அவன்."

"பின் உங்களுக்குள் உறவு தான் என்ன?"

"என்ன இழவோ? யார் கண்டார்கள். எப்படியோ உறவினன்."

"உனக்கு அம்மா அப்பா யாரும் இல்லேயா?"

"செத்துப் போனுர்கள்"

"வேறு"

"இவன்தான்"

"இங்கு ஏன் வந்தாய்?"

"உங்களேப் பார்க்க"

"விளேயாட்டு இருக்கட்டும் உண்மையைச் சொல்"

"பணம் சம்பாதிக்க"

"எத்தனே நாட்களாக இந்த வியாபாரம்?"

"இன்றுதான் தொடக்க விழா!"

"உனக்கு இதெல்லாம் கேலியாக இருக்கிறதா?"

"என்ன செய்வது? கேலிக் கேலி அழுதேன். இனி இப்படி கேலியும் கிண்டலுமாகத்தான் என் பொழுது கழிய வேண்டும்" என்றுள் அவள்.

ஞானசம்பந்தன் ஏதோகேட்க வாயெடுத்தான்.

"இதற்குள் அந்த மூலே ஆள் டாக்சி வந்துவிட்டது சார்" என்றுன்.

"இதோ" என்று ஞானசம்பந்தன் புறப்படத் தயார் ஆனுன்.

"போகின்றீர்களா" - என்று ஏக்கத்தோடு கேட்பதுபோல் இருந்தது அமுதவல்லியின்முகத் தோற்றம். ஆனல் ஞானசம்பந்தன் ஒன்றையும் பொருட்படுத்தாமல் மூலே முன்னே நடக்க அவன் பின்னே நடந்து கடகட வென மாடிப் படிகளே விட்டிறங்கி தெருவில் கால் வைத்தான்.

டாக்சியில் ஏறப் போகும் நேரத்தில் எங்கிருந்தோ ஒரு போலீஸ் லாரி வேகமாக வந்து அங்கே நின்றது. நின்றவுடன நாலேந்து போலீஸ்காரர்கள் அந்த வண்டியிலிருந்து குதித்து இறங்கி ஞானசம்பந்தனே நோக்கி வந்தனர்.

"நீங்கள்தானே... அறையில் இருந்தவர்?" என்று ஒரு போலீஸ்காரர் ஞானசம்பந்தனேப் பார்த்துக் கேட்டார்.

ஞானசம்பந்தனின் வயிறு கலங்கியது. தலே சுற்றியது. உலகமே உருண்டு ஓடிடும் பொருள் போல் ஆடிடுவதாக எண்ணினன். இல்லே என்று சொல்லிவிடலாமா என்று எண்ணினன். ஆனல் சற்று முன்தான் வந்து ஒரு ஸ்டேட்மெண்டும் எழுதி வாங்கிக்கொண்டு போனுர்கள். இதற்குள் இல்லே என்று சொன்னுல் என்ன ஆவது—சரிதான் வேறு வினேயே வேண்டாம். இது ஒன்றே போதும்-என்று எண்ணினன்.

"ஆ...மா...ம்" என்றுன்.

"அப்படியானல் இப்போது எங்கே போகிறீர்கள்?"

இதற்கு என்ன விடை சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. சின்ன வயதில் அவனுக்கு ஆசிரியர் சொன்ன பாடம் ஒன்று நினைவுக்கு வந்தது. அந்தப் பாடத்தை முடிக்கும்போது ஆசிரியர் ஒரு பொய் சொன்னால் அதை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டிவரும் என்று சொன்னார். ஞானசம்பந்தன் அப்போது அதை அச்சுறுத்த சொல்லும் 'பொய்' என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் இன்று அதன் உண்மைப் பொருளை இதோ கண் எதிரில் கண்டபோது அவன் நெஞ்சத்தில் நடுக்கம் பிறந்தது. அப்போதே 'இவள் யாரோ நான் யாரோ' என்று துணிந்து சொல்லிவிட்டிருக்கலாமே. இதோ 'ஏன் தனியே போகிறாய்' என்று சட்டத்தின் காவலர் கேட்கின்றார்! என்ன செய்வது என்று எண்ணிக் குழம்பினான். சரி அந்த ஒரு பொய்யை மறைக்க இன்னும் ஒன்பது பொய் சொல்லித்தான் ஆக வேண்டும்போல் இருக்கிறது என்று துணிந்துவிட்டான். துணிந்தவனுக்குத் துக்கம் இல்லை என்று எண்ணிவிட்டான்.

உடனே தன்னைக் கேட்ட அந்தப் போலீஸ்காரரைப் பார்த்து, "திடீரென்று அவளுக்கு வயிற்றுவலி வந்துவிட்டது. பட்டணத்துத் தண்ணீர் ஒத்துக்கொள்ளவில்லை. மருத்துவரை அழைக்கப்போகிறேன்" என்றான்.

அவன் சொன்னது உண்மைபோல் இருந்தது. போலீஸ்காரர் அதை நம்பினாலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். 'எதற்கும் அதையும் கேட்டுவிடுங்கள் என்றார் ஒருவர்.

"எதை?" என்றான் ஞானசம்பந்தன்.

"வேறு ஒன்றுமில்லை சார். இப்போது வழியில் ஒரு ஆளைப் பார்த்தோம். அவன் எங்களைக் கண்டு ஒதுங்கினாற்போல் நடந்தான். உடனே ஐயம் எழுந்தது. கூப்பிட்டு யார் என்ன என்று கேட்டோம்.

'நான் மேட்டூர். என் பெயர் அருணாசலம்' என்றான். எங்களுக்கு உடனே உங்கள் நினைவு வந்தது. அவனைப் பிடித்து வந்தோம். வாங்கள் மேலேயே போய் பேசுவோம் என்று சொல்லிக் கொண்டே ஒரு போலீஸ்காரரை 'அந்த ஆளைப்' பிடித்துக்கொண்டு வரச்சொல்லிவிட்டு மாடிப்படி ஏறினார். ஞானசம்பந்தனும் பிறரும் பின் தொடர்ந்தனர்.

ஒரு அறையில் உட்கார்ந்ததும் 'அந்த ஆளை' முன்னே கொண்டு வந்து நிறுத்தினர். அவனைக் கண்டதும் ஞானசம்பந்தன் திடுக்கிட்டான். அவன்தான் அமுதவல்லியுடன் இருந்த தடியன். இதோ தன் களவுகையும் மெய்யுமாக வெளிப்பட்டுவிட்டதே என்ன செய்வது என்று ஞானசம்பந்தன் கலங்கினான். ஆனால் அந்தக் கலக்கம் ஒரு நொடிதான். இதற்குள் நிலைமையைப் புரிந்துகொண்டான். இப்போது இருக்கும் நிலையில்தான் திறமையாக நடந்துகொண்டால்தான் தப்பமுடியும் இல்லையானால் தவிக்கவேண்டியதுதான் என்பதை உணர்ந்துகொண்டான். சரி ஆனது ஆயிற்று. இனி தயங்கினால் தப்பு என்று துணிந்து விட்டான். இப்படிச் சில வேளைகளில் எப்படியோ துணிவு எல்லோருக்கும் ஏற்பட்டு விடுகின்றது. அந்தத் திடீர்த் துணிவினால் நன்மை பெறுகின்றவர்களும் உண்டு நாசமாகிப் போகின்றவர்களும் உண்டு. ஞானசம்பந்தனுக்கு நன்மை தீமை பற்றி எண்ணிப்பார்க்க நேரம் இல்லை. இப்போது இன்னும் ஒரு பொய் சொல்லவேண்டும். அதைத் திறமையாகச் சொல்லவேண்டும் நம்பும்படியாகச் சொல்லவேண்டும், நடுங்காமல் சொல்லவேண்டும், என்ற எண்ணம்தான் மேல் எழுந்து நின்றது. இதுவரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் அவன் மனம் நிரம்ப அநுபவத்தைப் பெற்றுவிட்டது. முதலில்தான் எதிலும் கொஞ்சம் தயக்கம், சுணக்கம் எல்லாம். முதலில் கொஞ்சம் முன்நின்று வென்றுவிட்டால் பிறகு எதுவும் எளிதாகிவிடுகிறது. புதிதாக வாங்கியதும் எவ்வளவு விலை உயர்ந்த பேனாவும் நன்றாக எழுதுவதில்லை. பழகப் பழகத்தான் 'வெண்ணெய்போல்' எழுதுகிறது. 'என்ன ஐயா மாடு மிரளுகின்றதே' என்றால் 'புதிது ஐயா, பழகினால் சரியாகிவிடும்' என்று விடை கிடைக்கிறது.

ஞானசம்பந்தனுக்கு நல்லதிலே ஏற்பட முடியாத பழக்கம் இப்போது பொய் சொல்வதில் ஏற்பட்டுவிட்டது. அந்த நெருக்கடியான நேரத்தில் இன்னும் ஒரு பொய்க்குத் தந்தையாகிவிட்டான்.

"இவன் மேட்டூர், அருணாசலம் என்று சொன்னான் சார்" என்று போலீஸ்காரர் சொன்னதும் ஞானசம்பந்தன், "ஆமாம் ஐயா, எங்கள் ஊர்தான். என் உடன் வந்தவர்தான். நான்தான் துணைக்கு அழைத்து வந்தேன்" என்றான்.

"ஆனால் பெயரும் அருணாசலமா?" என்றார் அவர்.

"ஆமாம். இவருக்கும் அப்படித்தான் பெயர் வைத்துவிட்டார்கள். பட்டணம் புதிது. நீங்கள் கேட்டவுடன் மிரண்டுவிட்டார். வேறு ஒன்றுமில்லை." என்று சொன்னான்.

ஞானசம்பந்தனின் தோற்றமும் இவன் விடை சொன்ன முறையும் அந்தப் போலீஸ்காரரை நம்பவைத்தது. என்றாலும் போலீஸ்காரர் என்றால் இதோடு விட்டுவிடுவாரா?

"இவர் ஏன் இந்த நேரத்தில் வெளியில் போனார்?" என்று கேட்டார்.

"இதுவரை மோன நிலையில் நின்றிருந்த அந்த ஆள் இப்போது வாய்திறந்தான்.

"எனக்கென்னங்க ஐயா தெரியும். எங்க ஊரிலே போறது போல சும்மா போனேன்." என்றார்.

"சரி, சரி. இனி இப்படியெல்லாம் சுற்றாதே. ஐயாவுக்குத் துணையாக இரு" என்று புன்சிரிப்பு கலந்து சொல்லிவிட்டு அவர்கள் போய்விட்டனர்.

இதுவரை எங்கோ ஒட்டிக் கிடந்ததுபோல் ஒடுங்கிக்கிடந்த மூலை தயங்கியவாறு முன்னே வந்தான்.

'ஐயாவுக்கு இன்று நிரம்ப தொல்லை' என்றார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று சொன்னான் ஞானசம்பந்தன்.

மூலையும் அந்த தடியனும் ஏதும் சொல்லத் தோன்றாமல் வாளாவிருந்தனர்.

ஞானசம்பந்தன் விரைந்து வந்து டாக்சியில் ஏறிக்கொண்டு ..."கல்லூரி மாணவர் விடுதிக்குப் போ" என்று கட்டளை பிறப்பித்தான். அறையில் போய்ப் படுத்தபோது மணி மூன்று ஆகியிருந்தது. சற்று நேரத்தில்-சில மணி நேரங்களில்-தன் வாழ்க்கையில் நேர்ந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தபோது அவனாலேயே அவற்றை நம்ப இயலவில்லை. கனவில் கண்ட காட்சிகள் தெளிவின்றிக் கலங்கியிருத்தல்போலத்தான் அவற்றைப் பற்றி அவனால் எண்ண முடிந்தது.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தான். அதிர்ச்சி எதிர்பார்க்காத நேரத்தில், எதிர்பார்க்காத இடத்தில், எதிர்பார்க்காத முறையில் வந்து தாக்கியது. அந்தத் தாக்குதலிலிருந்து தப்பி அதனைத்தாங்கிக்கொள்ளும் திறமை இன்னம் அவனுக்கு வரவில்லை. அதனால்தான் ஏகாம்பரம் 'வருகிறாயா' என்று அழைத்தபோது அவனுக்கு ஏதோ விடை சொல்லி அனுப்பிவிட்டான். ஏகாம்பரமும் மனநிலை கற்றவன். ஓடுகின்ற குதிரையை விட்டுப் பிடிக்க வேண்டும் என்ற முறையைக் கடைப்பிடிப்பவன். அதனால் ஞானசம்பந்தன் தன்னோடு வந்தன் வேண்டுகோளை ஏற்கவில்லை என்றதும் 'சரி சரி நீ இப்படித்தான். இங்கே கிட. நான் போகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் போன சற்றைக்கெல்லாம் ஞானசம்பந்தனின் நெஞ்சத்தில் சில நினைப்புகள் குடிபுகுந்தன. 'ஏகாம்பரம் எங்காவது போனால் கவலை இல்லை. ஆனால் அவன் ஒய்யார விலாசுக்குப் போய்விட்டால் என்று எண்ணியபோதே அவனுக்கு 'என்னமோ'போல் இருந்தது. அந்த அமுதவல்லியின் அறைக்கே போனால்-இதை எண்ணியபோது ஞானசம்பந்தன் மனம் தன் உடைமை எதுவோ பறி போவதுபோல் பதறியது. அமுதவல்லியுடன் ஏகாம்பரம் என்று இணைத்து வைத்து எண்ணிப் பார்க்கவே கூசினான். தனக்கு உரியது ஒன்றை தன்னுடைய முயற்சியின்மையால் விட்டுவிடுவதைப்போல எண்ணினான்.

மனம் மிகவும் பொல்லாதது. சில வேளைகளில் ஒரு பொருளைதான் 'வேண்டாம்' என்று தள்ளி வைத்துவிடும். ஆனால் அந்தப் பொருளை வேறு யாரேனும் நாடுவதாகத் தெரிந்தாலும் போதும் உடனே முன்னே வெறுத்து ஒதுக்கியதை விரும்பி ஓடும்-அடைய நாடும். முன்னே வெறுத்தபோது இருந்ததைவிட வேகமும் ஆர்வமும் மிகுந்துகூட இருக்கும்.

ஞானசம்பந்தன் மனம் அப்போது அப்படித்தான் இருந்தது.

நேற்று இரவு வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்கிவிட்டு வாடகைக் கார் ஏறி விரைந்து வந்தான். இன்று அதே அமுதவல்லியுடன் தனக்கு அந்தஇடம் காட்டிய ஏகாம்பரம் இருக்கப் போகின்றான் என்பதை நினைத்தவுடன் வெறுப்பு விருப்பாகிறது. விருப்பு விரைவு தருகின்றது.

தொடரும்

எங்கும் கிடைக்கும்.

ஏழைகளின் தோழர்கள்!

பி. சோ. கட்சியின் தலைவரான **ஜே. பி. கிருபளானி** அவர்கள், தன்னுடைய 'மாஜி' நண்பர்களான காங்கிரஸ்காரர்கள் ஆட்சி பீடம் ஏறியபின்பு நடத்தும் ஆடம்பர வாழ்வை இங்கே கண்டித்திருக்கிறார். இந்தக் கட்டுரையை கிருபளானியின் 'ஆடம்பரமும் ஏழ்மையும்' என்ற நூலிலிருந்து வெற்றியூர் ஆ. நடராசன் அவர்கள் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள். [ஆ-ர்.]

இன்றைய நம் மாநில கவர்னர்களில் அநேகர் எளிய வாழ்வு நடத்திப் பழகியவர்கள். மரக்கறியே உணவாகக் கொள்பவர்கள். இருந்தும் இவர்களின் கீழ் முந்தைய ஆங்கிலமுறை உணவு தயாரிக்கும் சமையலாளிகளும் 'பட்லர்களும் பரிமாறும் சிப்பந்திகளும் இன்னும் வேலையில் இருந்து வருகின்றனர். இந்த வேலையாட்களுக்கோ மரக்கறி உணவே சமைக்கத் தெரியாது.

இந்தக் கவர்னர்களில் அநேகர் என் பழைய தோழர்கள். இவர்களைக் குறைகூற, இவர்கள் பால் எனக்கு எந்தவிதச் சொந்த விரோதமும் இல்லை. இக்குறைபாடுகளுக்கு இவர்கள் பொறுப்பாளிகளுமல்லர். உண்மை என்னவென்றால் இவர்களுக்குப் பழக்கமில்லாத இந்தச் சம்பிரதாயங்களை அநுசரிக்கும்படி இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

என் சொந்த அநுபவம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். கவர்னர் ராஜ பவனம் ஒன்றுக்கு உணவு அருந்த ஒரு நாள் நான் விருந்தினனாகப் போயிருந்தேன். அப்போது இன்னொரு பிரமுகரும் விருந்தினராக அழைக்கப்பட்டு அங்கே வந்திருந்தார். அன்று நாங்கள் இருவரே விருந்தினர். எங்கள் இருவரிடமும் உணவு உண்ணும் அறை அமைப்பையும், அறையில் மேசை அருகே எங்கள் இருவருக்கும் உணவு கொள்ள இடப்பட்டிருக்கும் இருக்கைகளையும் விளக்கும் அச்சிட்ட படங்கள் அளிக்கப்பட்டன! ஆனால், விருந்தளிக்கும் கவர்னர்—எங்கள் நண்பர்—எங்களை வரவேற்பு அறையிலிருந்து உணவு கொள்ளும் அறைக்கு இட்டுச் செல்ல எங்களுடனேதான் இருந்தார். அவ்வாறே அவரே இட்டும் சென்றார்! அங்கே எங்கள் பெயர்கள் அச்சிட்ட அட்டைகளும் மேசைமீது காட்சி தந்தன. இவை மட்டுமா? உணவு வகைகளை விவரிக்கும் பட்டியல் (Menu Card) எங்களிடம் உணவுக்கு முன் அளிக்கப்பட்டன. அவற்றில், சோறு, தக்காளி, பச்சைக்கடலை, பருப்பு, ஐஸ்கிரீம் என்று வரிசையாக உணவுகள் அச்சிடப்பட்டிருந்தன!

இந்த ஆடம்பரம் அத்தனையும் ஆங்கிலேய முறையைச் சார்ந்தவையாயிருந்தும், இந்தியப் பாணியில்தான் உணவு பரிமாறப்பட்டது. நமது முறைப்படி எல்லா உணவுகளும் ஒரே நேரத்தில்தான் பரிமாறப்பட்டன. ஐஸ்கிரீம் மட்டிலும் கடைசியாக வழங்கப்பட்டது.

'பட்டியலி'ல் குறிப்பிட்டிருந்த உருளைக்கிழங்கு, தக்காளி, பச்சைக் கடலை எங்கே என்று தேடினேன். என் முயற்சி எளிதில் பலன் தரவில்லை. கடைசியில் ஒரு கெட்டிக் குழம்பு இருந்த கிண்ணத்துக்குள் கரண்டியை இட்டேன். அங்கே மேற்கண்ட மூன்றும் ஒன்றாய் அகப்பட்டன. 'தக்காரி' என்ற இந்திய உணவு அன்றோ இது என்று, என்னையே கேட்டுப் புரிந்து கொண்டேன்.

கவர்னர் பதவியின் பெருமை இந்த ஆங்கில ஆடம்பர வாழ்க்கை முறையிலா அடங்கியிருக்கிறது? இது ஆங்கிலேயரிடம் கற்றுக் கொண்ட அடிமைப் பாடம் அல்லவா? இத்தகைய அநுபவங்கள் எவரையும், நமக்குச் சொந்த உணவு முறையில்லையா, நமக்கு சொந்தச் சுவையில்லையா என்றே கேட்கத் தூண்டும்.

ஒரு மாநில மந்திரி சபைக்கு ஏற்படும் செலவினும் ஒரு மாநில கவர்னரின் செலவு அதிகம் என்று ஒரு அமைச்சர் என்னிடம் கூறினார். ஒரு அந்நிய நாட்டு ஏகாதிபத்திய அரசின் பிரதிநிதியாக ஆட்சி செலுத்திய ஒரு கவர்னரின் சகல ஆடம்பரங்களும் இன்றைய கவர்னருக்கும் இருந்து வருகிறது. இன்றைய கவர்னர்கள் முந்தைய கவர்னர்களைப் போல ஆட்சி செலுத்துபவர்களல்லர். ஆனாலும் இவர்களுக்கும் மெய்க்காப்பாளர் உண்டு. இந்த சுயராச்சியக் கவர்னர்கள் முந்தைய ஏகாதிபத்தியக் கவர்னர்கள் வாழ்ந்த மாளிகைகளில்தான் வாழ்கிறார்கள். இந்த மாளிகைகள் ஒவ்வொன்றும் பெரிய நகரங்களில் ஒரு சதுர மைலை அடைத்துக் கொண்டு பரந்து கிடக்கின்றது. 'சுயராஜ்யம் பெற்றதும் இப்பெரிய மாளிகைகள் ஏழை மக்களின் மருத்துவ மனைகளாக மாற்றப்பெறும்' என்று காந்திஜி சொன்னார். ஆனால் **அம்மாளிகைகள் இன்று களைத்துப் போன அரசியல் (காங்கிரஸ்) தலைவர்களுக்கும், தேர்தலில் தோல்வி அடைந்த அரசியல் வாதிகளுக்கும் ஓய்வளிக்கும் ஆடம்பர மனைகளாக மிளிர்கின்றன.**

நமது ராஷ்ட்ரபதி ராசேந்திர பிரசாத் இடற்கையில் எளிய பழக்க வழக்கங்கள் அமையப் பெற்றவர். அவர் புலமைக்கும், அறிவுக்கும், நாட்டுப் பணிக்கும் அவர் அடக்கம் மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. இன்று அவரை ஆட்டுவிக்கும் ஆடம்பர முறையை அவர் கொஞ்சமும் விரும்பவில்லை. அவரைத் தன் போக்குக்கு விட்டுவிட்டால் மிக மிக எளிமையாய் வாழ்ந்து காட்டுவார். நம் மக்கள் நிலைக்கும், நாட்டு நிலைக்கும் அதுவே பொருத்தமாக இருக்கும்.

அவரது 'பவன' வாயில்களைக் காக்க எத்தனை வீரர்கள் சிலைகள் போல் நாள் முழுதும் விரைப்பாக நின்று தொலைக்கிறார்கள். சிறப்பு நாட்களில் தர்பார் மண்டபத்தில் படிக்கொரு காவல் வீரன் நிறுத்தப் படுகிறான்.

ராஷ்ட்ரபதி சட்டமன்றத்துக்கு தலைமை உரை நிகழ்த்த வரும் போது, 15-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் அரசர் பவனி வந்த வண்டி போன்ற குதிரைகள் பூட்டிய வண்டியில் அவர் வருகை தருகிறார். இது சத்ரபதி ஆட்சியையன்றோ நினைப்பூட்டுகிறது! ஜனநாயகம் என்ற பெயர் நம் ஆட்சி முறைக்குப் பொருந்துமா?

இவ்வித ஆடம்பரங்கள் மதிப்புக்காகவும், கவுரவத்துக்காகவும் கைக்கொள்ளப்படுவதாகச் சொல்கிறார்கள். இது எவ்வளவு உண்மையோ நாம் அறியோம். பணச்செலவில்லையானால் நாம் 'தொலையட்டும்' என்று விட்டுவிடலாம்! எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களுக்கு-கல்வி, மருத்துவம்போன்ற அவசரப் பணிகளுக்குப் பணம் தேவையாகயிருக்கும்போது, மக்கள் வரிப் பணத்தை ஏப்பம் விடும் இவ்வித வீண் செலவுகளை நாம் எப்படிப் பொறுத்துக்கொள்வது?

—**ஜே. பி. கிருபளானி**

★ ★ ★

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

கல்மேல் எழுதுவது இதற்கு நேர் மாறு; அது உறுதிக்கு உவமையாகக் கூறப்படுவது.

நீர்மேல் எழுத்தையும் கல்மேல் எழுத்தையும் ஒப்பிட்டுப் பேசும் மூதுரைப் பாட்டு:

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

நல்லவர்களுக்குச் செய்கின்ற உதவி, அதாவது உபகாரம் கல்மேல் எழுத்துப்போல அழியாது விளங்கும். அன்பில்லாத மனமுடையவர்களுக்குச் செய்கின்ற உதவியோ, நீர்மேல் எழுத்துப் போல நொடிப்போதில் அழிந்துவிடும். இதுதான் ஔவையார் கூறும் நீதி.

தயங்காது, மயங்காது பிறருக்கு உதவுக; பயன் கிடைக்குமா என்று ஐயப்படாமல் உதவுக என்று தென்னையைச் சான்றுகாட்டி அறிவுரை கூறிய ஔவைப்பாட்டி, யாருக்கு உதவ வேண்டுமென்று சுட்டிக்காட்டுகிறார்.

'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்பது முதியோர் வாக்கு. உதவிபுரிவதும் குணநலம் பார்த்தே செய்ய வேண்டும்.

தென்னைக்குத் தண்ணீர் வார்த்தோம்; இளநீர் தருகிறது. பாம்புக்குப் பால் வார்த்தால் என்ன நேரும்? நம் உயிருக்கே தீம்பு வரும்!

யாருக்கு உதவுவது?

ஆகவே குணமுடையவர்களுக்கே உதவ வேண்டும். அப்படிச் செய்யும் உதவி என்றும் நிலைத்திருக்கும். அவர்கள் அந்த உதவியை என்றும் போற்றி மகிழ்வர். கல்மேல் பொறித்து வைத்த எழுத்துக்குச் சமமாக அது என்றும் நிலையாக விளங்கும்; அழியாது.

'நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம், கல்மேல் எழுத்துப்போல் காணுமே' என்று மூதுரை சொல்லும் கருத்து இதுதான்.

ஆனால் அற்பருக்கு-ஈரமில்லாத-அன்பில்லாத மனமுள்ளவர்களுக்கு செய்கின்ற உதவி கண்ணைச் சிமிட்டுவதற்குள் மறைந்துவிடும்; தண்ணீரில் எழுதிய எழுத்தைப்போல அது கணப்பொழுதில் மாயமாகக்கரைந்துவிடும். அதாவது அற்பர்கள் தாம் பெறுகின்ற உதவியை உடனே மறந்துவிடுவர். அந்த உதவியை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவும் மாட்டார்கள். அது விழலுக்கு இறைத்த நீராக, காட்டில் எரித்த நிலாவாக வீணாகிவிடும்.

'ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம் நீர்மேல் எழுத்திற்கு நேர்' என்று மூதுரை சொல்லும் கருத்து இதுதான். ஈரம் என்றால் அன்பு. அன்பில்லாத நெஞ்சத்தார்க்குச் செய்கின்ற உதவி, நீரின்மேல் எழுதிய எழுத்தைப்போல அழிந்துவிடும். கல்லின்மேல் எழுதிய எழுத்துப்போல நிலைத்திராது.

உதவும் பண்பை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தும் ஔவை, யாருக்கு உதவ வேண்டுமென்றும் தரம் பிரித்து நயமாகச் சொல்கிறார்.

உங்கள் உதவி என்றும் நிலைத்திருக்க வேண்டுமா? நல்லவர்களுக்கு உதவுங்கள்.

இல்லை-அற்பர்களுக்கு உதவுவீர்களானால், அது அவர்களுக்கும் பயன்படாது, உங்களுக்கும் பயன்படாது. அதுமட்டுமன்றுகணப்பொழுதில் அழிந்து போய்விடும்.

கல்மேல் எழுத்தாக, நிலைத்த பயனுள்ளதாக, என்றும் புகழ்மணக்கக் கூடியதாக நம் உபகாரங்கள் அமையுமாக! ★

மதுரை தியாகராாசர் கல்லூரியில் கண்ணதாசன்

மதுரை தியாகராாசர் கல்லூரி இளங்கோ மன்றத்தின் ஆண்டு விழா 24-2-58 ம் தேதி திங்களன்று மாலை, **தி. மாணிக்க வாசகம்** அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. மாணவர் தலைவர் **தங்கமுத்து** அவர்கள் தியாகராாசர் கல்லூரி மாணவர்களின் நாட்டுப்பற்றையும் தமிழார்வத்தையும் எடுத்துரைத்தார். மன்றச் செயலாளர் **சுப்ரமணியம்** அவர்கள் ஆண்டறிக்கை படித்தார். இறுதியாக ஆசிரியர் **கண்ணதாசன்** இளங்கோவின் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும், இனப்பற்றையும் குறித்து விரிவுரையாற்றினார்.

கூட்ட முடிவில் பன்மொழிப் புலவர் பொன்விழா நிதிக்காக தியாகராாசர் கல்லூரி மாணவர்களின் சார்பில் ஆசிரியர் கண்ணதாசனிடம் ரூ. 135 அளிக்கப்பட்டது.

ஆண்டு விழாக் கூட்டத்திற்கு, கல்லூரி முதல்வர், டாக்டர் ராசமாணிக்கனார், பேராசிரியர் ஔவை துரைசாமி மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் அனைவரும் வந்திருந்தார்கள்.

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

சொற்களையும் 'என் தாய் மலடி' என்று சொல்லி அறவே மறந்து விடுகிறார்கள்.

குறை கூறுவதில் எனது நோக்கம்

இங்ஙனம் குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டுவதில், நான் ஒரே நோக்கமுடையவன். தமிழ் மொழி நேரான, பொருத்தமான, பலரும் விரும்பி மேற்கொள்ளக்கூடிய முறையில் வளர வேண்டுமென்பதே அது. ஓர் ஆங்கிலச் சொல்லையோ, தொடரையோ, வாக்கியத்தையோ மொழி பெயர்க்கும்போது தமிழ் மொழியில் அவற்றுக்கு நேரான சொல்லோ, தொடரோ வாக்கியமோ இல்லையென்று திண்ணமாய்த் தெரிந்தாலன்றி, புதிய சொல்லையோ தொடரையோ வாக்கியத்தையோ கற்பிக்கக்கூடாது. அப்படிக் கற்பிக்கும்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டால் தமிழர் அனைவரும் விருப்பி ஏற்றுக்கொள்ளுமாறு மொழிகள் இனிய ஒலியுடன் தமிழனின் தமிழாகவே அமைத்தல் வேண்டும். லங்காஷயர் பெண்ணை மதுரைக்கு அழைத்து வந்து சுங்கடிப் புடவையை உடுத்துவிக்கக் கூடாது. அச்செயல் உண்மைத் தமிழரை நகைக்கும்படி செய்யும்.

ஒவ்வொரு மொழிக்கும் தனிச் சிறப்பு உண்டு

ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் சரியான பொருத்தமான தமிழ் சொல் இருக்கத்தான் வேண்டும் என்பதில்லை. அப்படி எதிர்பார்க்கவுங்கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு மொழிக்கும் தனியான சொற்களோ தொடர்களோ வாக்கியங்களோ உள்ளன. ஒரு மொழியின் பொருளை இன்னொரு மொழியாற் கூறும்போது அம்மொழியை விளக்கிக் கூறிற் கூறலாமேயன்றி, இந்த ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் இது என்று எடுத்துச்சொல்ல முடியாது. படைக்கின்றவர்கள் தனித் தனியாக உட்கார்ந்து, அவர்கள் மனம்போன போக்கில் சொற்களைப் படைத்துக்கொண்டே போனால் அப்படைப்பு ஓர் எல்லைக்குள்ளகப் படாமல் விரிந்து போகும். விரிந்தால் ஒருவருக்கொன்றாகவும் இன்னொருவருக்கு மற்றொன்றாகவும் போதல் கூடும். அப்படிப் போனால் படிக்கின்றவர் மனத்தில் இதுவோ அதுவோ என்னும் ஐயமும் குழப்பமும் ஏற்படும்.

குழப்பத்தை தவிர்ப்பது எப்படி?

இக்குழப்பத்தால் தமிழின் தனிச் சிறப்பு சீர்குலையும். இதைத் தவிர்ப்பது எப்படி? பலர் பலவாறு அவ்வப்போது தனித் தனியே படைத்த புதிய சொற்களையும் தொடர்களையும் தொகுத்தபின், தமிழறிஞர் பலர் அடங்கிய பேரவையில் அச்சொற்கள் ஒவ்வொன்றையும் வாதமும் கோபமுமில்லாமல் அவ்வறிஞர்கள் ஆராய்ந்து, இது தக்கது, இது தகாதது, என்று துணிந்து கூற வேண்டும். அதன் பின்பு அவையோரால் ஒப்பம் பெற்ற சொற்களை மட்டும் தனியே தொகுத்து எண்ணிடல் வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் இத்தகைய தொண்டினை மிக்க இலேசாகச் செய்யமுடியும். செய்தால் அவர் தம் களஞ்சியம் பாடு பெறும். என்ன காரணத்தால் இவர்கள் கொண்டை மேற்காற்றடிக்க இருக்கின்றார்கள் என்பது விளங்கவில்லை. இன்னொரு கழகத்தார் இப்போது தமிழ் மொழி போகின்ற போக்கிலே எப்படித்தான் செய்துவிடமுடியும் என்பதும் விளங்கவில்லை.

இந்த வேலையை சென்னை தமிழ்க் கலை மன்றம் எடுத்துக்கொண்டால் மிகவும் பொருத்தமாயிருக்கும். அந்த மன்றத்தில் பல தமிழறிஞர் உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்கள் தமிழ் ஆராய்ச்சியில் ஊக்கமுடையவர்கள்.

தமிழ்ப் பத்திரிகைகள் ஆங்கில மொழியிலுள்ள அருஞ் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் படைத்தோ கண்டுபிடித்தோ வெளியிடலாம். வாசகர்களும் அதிற் கலந்துகொண்டு தங்கள் அபிப்ராயங்களை அவ்வப்போது வெளியிடுவார்கள். அவற்றையும் கலந்துகொண்டு கடைசியில் ஒரு முடிவுக்கு எளிதில் வந்துவிடலாம். சில சிக்கல்கள் இருந்தாலும்போகப் போக ஒரு நல்ல சொல் யாராலேயாவது வெளியிடப் பெற்று எளிதில் கிடைக்கவுங்கூடும்.

★ ★ ★

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

பதினைந்து ஆண்டுகளாக, சிங்கப் பெருமாளின் மெய்காத்து நின்ற அவன் முதன்முதலாக அன்றுதான் முறித்துப் பேசினான்.

"அம்பலகாரரே, மறவன் உயிருக்கு மானம்தான் மயிலாசனம்! மறந்துவிடாதீர். இன்று பூவாத்தாள்! நாளை உம்மகள் குஞ்சரம்! – நினைவிருக்கட்டும்!" என்று கர்ஜித்தான் மான்கொம்பு.

"மான்கொம்பு!"-பல்லைக் கடித்தான் சிங்கப்பெருமாள்.

"நேற்றுவரை தங்கள் பார்வைக்கே தனி மதிப்புக் கொடுத்தேன். இன்று உங்கள் உதிரத்தைக் குடிக்கவே தயாராகிவிட்டேன். என் மகளைப்போல், உன் மகள் துடிக்கப் போகிறாள். இதைச் சவாலாக விடுகிறேன்" என்று இரைந்தான் மான்கொம்பு.

"டேய் மான்கொம்பு, சிங்கப்பெருமாளிடம் சபதம் போடாதே! என்னை எதிர்த்தவர்களின் ஈரலை வகுந்தவன் நான். தெரியுமல்லவா உனக்கு!"

"தெரியுமே! வகுந்த அரிவாள் யாருடையது? என்னுடையது என்பதை மறந்துவிட்டீர்கள். அந்த அரிவாள் தங்களைக் குறி வைக்கிறது" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான் மான்கொம்பு. உடனிருந்த அந்த வாலிபனும் மான்கொம்பைப் பின்தொடர்ந்தான்.

★

பொழுது விடிந்தது. ஊரிலே பெரும் அமளி. முள் அளவு நீதிக்கு மலையளவு அநீதியைக்கூட எதிர்க்கச் சக்தி இருக்கிறது. பூவாத்தாளின் சாவு, மான்கொம்புவுக்கு நிறைந்த அனுதாபத்தைத் தேடிக் கொடுத்தது. ஆனால் "பூவாத்தாள் நல்லவள்தான், ஆனால் அதற்காக மான்கொம்பு குஞ்சரத்தைப் பலிவாங்கச் சபதம் செய்யலாமா?" என்றும் பொதுமக்கள் பேசத் தலைப்பட்டார்கள்.

எவ்வளவுதான் விரிந்த மார்பும் வீறிட்டெழும் புலியின் பலமும் பெற்றிருந்தாலும் உள்ளம் கலங்கிவிட்டால் அழுகிய முட்டையைப்போல் உடல் கலகலத்துவிடுகிறது.

மான்கொம்பு மிகுந்த பராக்கிரமசாலி. கோட்டையூர் காட்டில் எத்தனையோ முறை தனி மனிதனாக உலாத்தியிருக்கிறான். முயல்வேண்டுமென்று அம்பலகாரர் ஆணையிட்டால், 'முயல் போதுமா? மான் வேண்டாமா? கௌதாரி தேவையில்லையா' என்று கேட்பான். அவன் ராஜவிசுவாசத்திற்கு இலக்கணமாக விளங்கினான். நாயின் நன்றியும், காக்கையின் ஒற்றுமையும் இணைந்து பெற்ற பண்பாளன்.

உலகம் ராஜவிசுவாசத்தை ஒரு பக்கத்திலே இருந்து மட்டுமே எதிர் பார்க்கிறது. அன்பறுக் கட்டுப்பட்ட ராஜவிசுவாசம்தான் மேக மண்டலத்தையும் குடைந்து அதற்கு மேலும் வளரக்கூடியதாக அமைகிறது. மிரட்டி, உருட்டி, மிருக பலத்தைக்கொண்டு ராஜவிசுவாசத்தை உருவாக்க விரும்புகிறவர்கள் 'அடிமைத்தனம்' என்ற பிணிபிடித்த சொல்லுக்கு 'விசுவாசம்' என்று பட்டுக்கம்பளி போட்டு மூடுகின்றவர்களாவார்கள். உலகத்தில் எந்த நோய்க்கும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை மருத்துவம் பலிக்கும் மாற்று மருந்தும் உண்டு. அதைப்போல், நாட்டில் ஒருவரை ஒருவர் நம்பி, விசுவாசம் பெருக வேண்டுமானால் பணியாட்களிடம் எதிர்பார்க்கும் விசுவாசத்தை, முதலாளிகள் அன்பின் மூலமாக அவர்களுக்குத் திருப்பித் தரவேண்டும். அதுவரை, உண்மையான விசுவாசிகள் பெருகுவதற்குப் பதிலாக 'ஆபத்தான அடிமைகளே' நிறைந்து கொண்டுவார்கள்.

மான்கொம்பு சிங்கப்பெருமாளிடம் பழகிய விதத்தை பார்த்தவர்கள் மறக்கமாட்டார்கள். இத்தனைக்கும் மான்கொம்பு கஞ்சிக்குச் செத்தவனல்ல; நஞ்சையுண்டு, புஞ்சையுண்டு; நல்லதொரு தோட்டமுண்டு. ஆடு, மாடு, உண்டு; அத்தனையையும் கட்டி மேய்க்க ஆளுமுண்டு. இருந்தாலும் அம்பலகாரரிடம் அவன் அவ்வளவு விசுவாசமாக இருந்தான்.

"அல்லும் பகலும் அவருக்காகவே உழைத்தேன். சொந்தக் கிராமத்தையே பகைத்துக்கொண்டேன். என்னுடைய மகளுக்கு அவமானம் என்றபோதும் அம்பலகாரர் அசையவில்லையென்றால் இந்த மான்கொம்பு உழைத்ததற்குப் பலன் அம்பலகாரரின் மானத்தை வாங்குவது என்பதைத் தவிர வழியில்லை என்றுதானே அர்த்தம்." இதுவே மான்கொம்பான் உள்ளத்தில் அணையாத கனவாகிவிட்டது.

இன்னொருவனுக்கு வேலையாளாக இருந்த மான்கொம்பு இப்போது தலைவனாகிவிட்டான். கிராமத்திலே இரண்டு கட்சிகள்! பூவாத்தாள் இறந்து முப்பது நாழிகைக்குள் இத்தனை மாற்றங்கள்!

காலை பத்து மணியளவில் சிங்கப் பெருமாள் வீட்டுக்குப் போனார். வீட்டில் குப்பைகூலங்கள் நிறைந்து கிடந்தன. அன்புடன் வளர்த்த வரிச்சியூர் வேட்டை நாய்கள் இரவெல்லாம் உணவில்லாதிருந்ததை அம்பலகாரர் உணர்ந்தார். கூண்டுக்கிளி கதறியது.

அம்பலகாரர் குஞ்சரத்தின் அறைக்குப் போனார்.

- முடியவில்லை -

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரையார்

பொன்விழா-கலை நிகழ்ச்சிகள்

6-4-58ம் தேதி ஞாயிறன்று

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்

முழு விபரங்களும் 15-3-58ம் தேதிய தென்றல் இதழில் அறிவிக்கப்படும்.

கேள்விப்பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

தி. பஞ்சாட்சரம்,
மண்டைத்தீவு, இலங்கை.

சமயம் வாழ்க்கைக்குத் தேவையானதா இல்லையா?

இன்று சமயம் மனித நாகரிக வாழ்வில் ஒரு பகுதியாக மட்டுமே இருக்கிறது. அரசியல் சமுதாயம், கலை இயல்கள், தொழில், கேளிக்கைகள் ஆகியவை தனி மனிதன் வாழ்விலும் சரி, பொதுவாழ்வு, நாட்டு வாழ்வு, உலக வாழ்விலும் சரி, சமயத்துடனொத்த பிற வாழ்க்கைத்துறைகளாக அமைந்துள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்திலும் அதன் வாழ்வுடன் தொடர்பு கொள்ளும் நற்பேறோ அவப்பேறோ கொண்ட சூழ்நிலங்களிலும் சாதி கூட இவற்றுடனொத்த இன்னொரு முக்கிய வாழ்க்கைத்துறையாய் அமைந்துள்ளது. தனித்தனி சாதிகள் மட்டுமன்றி, பிராமணர் அல்லது ஆரிய இனத்தார் என்று கருதப்படுபவர், ஆரியருக்கு அரைகுறை அடிமைகளாகிவிட்ட திராவிட இனத்தவர் அல்லது பிராமணரல்லாத இனத்தவர், ஆரியருக்கும் அரைகுறை அடிமைத் திராவிடருக்கும் அடிமைகளாக்கப்பட்ட நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிட இனம் என்ற பிரிவுகள்கூட இந்தியத் துணைக்கண்டத்தை அலைக்கழிக்கின்றன.

இந்தியாவில் சாதியும் சமயமும், மற்ற உலகப் பகுதிகளில் சமயமும், மனித இனத்தின் நாகரிக வாழ்வின் துறைகளில் ஒரு துறை அல்லது இரு துறைகளாக மட்டும் இயங்கவில்லை. அதுவே மிகப் பழமைப்பட்ட, ஆனால் மற்றத் துறைகளுடன் ஒத்து வளராத பிற்பட்ட துறையாய், எவ்வளவு முற்போக்கான நாகரிகத்திலும், நாகரிகத்தின் முற்போக்கில் முட்டுக்கட்டையிடும் துறையாய்த்தான் இருக்கிறது.

ஆயினும் இக்காரணத்தால் சமயம் ஆற்றலற்ற துறை ஆய்விடவில்லை. பொருளாதார நிலை, கல்வி, அரசியல் உரிமை, ஆட்சி ஆற்றல் ஆகியவை தனி மனிதனை—அடிக்கடி அத்துறைகளில் வலிமை பெற்ற செல்வர்களை, உயர்குடி, உயர்பதவியாளர்களை – சாதி சமய ஆற்றல்களின் பிடியிலிருந்து தளர்த்திவிட உதவுவதுண்டு. ஆனால் பெரும்பான்மையான பொதுமக்களைப் பொறுத்தமட்டில்—தொழிலாளர், ஏழை எளிய மக்களைப் பொறுத்த மட்டில் மதம் மனித வாழ்வைமட்டுமல்ல, வாழும் உரிமை, பேச்சுச் சுதந்தரம், நினைவுச் சுதந்தரம் ஆகியவற்றையும், சுதந்தர வேட்கையை, சுதந்தர எண்ணத்தையே சொல்வதாகத்தான் இருக்கிறது. சமயத்தைவிடச் சாதி இவ்வகையில் இன்னும் கொடுமையானது. ஏனெனில் மதம் அறிவாற்றலற்ற ஏழைப் பொது மக்களையே பெரிதும் கசக்கினாலும், சாதி சில சமயம் படித்தவர்கள், செல்வர்கள், உயர்குடியினர்களைக் கூடக் கசக்கிப் பிழிகிறது.

சமயத்தின் இந்த ஆற்றலுக்கு—சமயத்தைக்கடந்த சாதியின் இந்த ஆணவ ஆற்றலுக்குக் காரணம் மனித இனத்தின் வரலாற்றில் அவை பழமையில் ஆழ்ந்து ஊன்றி வேர்க்கொண்டு விட்டதேயாகும். எவ்வளவு ஆற்றல், செல்வம், அறிவு, செல்வாக்குப்பெற்ற மனிதனும், வேண்டுமானால் தனிமனிதன் என்ற முறையில்தான் அவற்றின் பிடியிலிருந்து சிறிது விலகி வாழ முடியும். சமுதாயத்தில் அவற்றின் பிடியை அரசாங்கங்கள், சட்டங்கள் பணம், அறிவு, கலை எதுவும் அசைக்க முடிவதில்லை. மனித இனம் விலங்காயிருந்த காலத்திலிருந்து அவன் விலங்கியல்பில் வேரூன்றி வளர்ந்துவிட்ட கருங்கற்பாறைப் பண்புகள், இரும்புச் சட்டங்கள் அவை.

மனித இன வாழ்வின் தொடக்கத்தில் சமயத்தின் நிலை இன்றைய மனித இன வாழ்வில் சமயத்தின் நிலைபோன்றதன்று. இன்று சமயம் மனித வாழ்க்கையின் துறைகளில் ஒரு துறை. பண்டு அதுவே மனித வாழ்க்கையின் ஒரே துறை. அதுவே பண்டை மனிதனின் இன வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, பொருளாதார வாழ்வு, தொழில் ஆகிய எல்லாமாய் இயங்கிற்று. இன வாழ்வு ஒன்று நீங்கலாக மற்றத் துறைகளெல்லாம் சமயத்துக்குப் பின்னால் தோன்றியவையே. சமுதாயவாழ்வு, தொழில், பொருளாதார வாழ்வு ஆகிய ஒவ்வொன்றும் இனவாழ்விலிருந்தும் சமயவாழ்விலிருந்தும் பிரிந்து தனித்துறையானபின், சமயவாழ்வின் எல்லைதான் குறைந்தது; அதன் ஆற்றல் குறையவில்லை. ஏனெனில் மற்றத் துறைகள் புதியவை; மனித வாழ்வில் ஆழ்ந்து வேரூன்றாதவை. ஆனால் சமயவாழ்வோ இனவாழ்வு ஒன்று தவிர, மற்ற எல்லாத் துறைகளையும்விட மனித வாழ்வில் ஆழ்ந்து பதிந் வேரூன்றிப் பரவியது.

தற்கால மனித இன நாகரிகத்தில் சமயவாழ்வினும் பழமையான கூறுகள் இனவாழ்வுச் சார்பான சாதி, மொழி ஆகிய இரண்டுமே. இவற்றுள் இந்தியத் துணைக்கண்டத்துக்கு வெளியே இனவாழ்வின் சின்னம் மொழி ஒன்றே—சாதி கிடையாது. ஆனால் சாதி வேறுபாடற்ற சமுதாய மரபுகள், பழக்க வழக்கங்கள் சமயத்தை விடப் பழமையானதாக எல்லா நாடுகளிலும் உண்டு.

சமயத்தைவிட ஆற்றல் வாய்ந்த திறங்கள் இன்று உலகில் மொழி, சாதி, தேசிய இன வாழ்வு ஆகியவைகளே.

சமயம் மொழி, சாதி, தேசிய எல்லை கடந்து வளரத் தொடங்கிய பின்—உலக சமயங்களான புத்த, கிரிஸ்தவ, இஸ்லாமிய சமயங்கள் தோன்றியபின் — இச்சமயங்களின் எல்லை மொழி, தேசிய எல்லை தாண்டிப் பரவின. ஆனால் பரந்த நீர் ஆழம் குறைவதுபோல, இந்த உலகச் சமயங்களின் ஆற்றல், பழய இனவாழ்வு கடவாத சமயங்களின் ஆற்றலைவிடக் குறைவு. அதே சமயம் இனவாழ்வு கடந்து வளர்ந்த சமயங்களே மனித நாகரிகத்தை வளர்ப்பவை - அவையே முற்போக்கான சமயங்கள்.

இந்து மதம் என்று கூறப்படும் இந்தியத் துணைக்கண்டத்துச் சமய வாழ்வில் முற்போக்கான சமயத்தைவிட முற்போக்கான கூறுகள் உண்டு. ஆனால் சமயவாழ்வு பிற்போக்கானது, சமயத்தின் இப் பிற்போக்கை முற்போக்கான கொள்கைகள் அசைத்துவிடாது. ஏனென்றால் சமயம் இனவாழ்வு கடவாது, அதனுடன் கட்டுண்டு விட்டது.

அதுபோல இனவாழ்வு, இனவாழ்வின் தொடக்கக் காலப் பிற்போக்குச் சின்னங்களாகிய சாதியிலிருந்து கட்டுண்டு வளரமுடியாதிருக்கின்றது. எனவேதான் சமயம் இன வாழ்வுடன் கட்டுண்டும், இன வாழ்வு சாதியுடன் கட்டுண்டும் இந்தியத் துணைக்கண்டம் எவ்வளவு முற்போக்கான அரசாங்கங்களாலும், மதங்களாலும், சட்டங்களாலும், கொள்கைகளாலும், இயக்கங்களாலும் ஒரு சிறிதும் உண்மையில் முன்னேற முடியாத செறிந்த பிற்போக்கு மாநிலமாக இருந்து வருகிறது.

இந்தியத் துணைக்கண்ட வாழ்வில் ஒளியூட்ட முயன்ற புத்தர் பிரான் உலகில்தான் ஒளியூட்ட முடிந்தது. இந்தியாவின் சாதி-இனச் சங்கிலியில் பிணிப்புண்டு, சமய இருள் மீட்டும் படர்ந்தது. சைவ வைணவ சமயங்கள் மீட்டும் இச்சங்கிலி தவிர்க்க முயன்று, இன்றுவரை தோல்வியே யுற்றன. புத்தர்பிரானும், சைவ வைணவ சமயங்களும் மட்டுமன்றி, கிரிஸ்தவ இஸ்லாமிய சமயங்கள்கூட வெற்றி காணமாட்டாத இந்த இருண்ட மாநிலத்தில் ஒரு சிறிது ஒளியூட்டிய தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. ஒருவரே. ஒரு சிறிது புத்தொளி வீசி வரும் இயக்கம் திராவிட இயக்கமே.

வருங்காலத் தென்னாட்டு வாழ்வு மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்ட வாழ்வும், தென்கிழக்காசிய வாழ்வும் கீழ்த்திசை வாழ்வுமே திராவிட இயக்கத்தின் எதிர்காலத்தைத்தான் பொறுத்தது.

இப்பின்னணிகளுடனே தான், 'சமயம் வாழ்வுக்குத் தேவையானதா, இல்லையா?' என்ற கேள்விக்குப் பதில் காணமுடியும். ஏனென்றால், கேள்வியிலேயே பின்னணியில் அறியாமை மிளிர்கின்றது. சமயம் வாழ்வுக்குத் தேவையோ, தேவையில்லையோ அதை விட்டு மனித இனம் இன்றிருக்கும் நிலையில் விலகமுடியாது. அது தேவை என்று சமயவாதிகூறலாம்; ஆனால் உலகம் சமயமே எல்லாமாய் இருந்த காலங்கடந்து வளர்ந்துவிட்டது. சமயம் இனி உலகத்தைக் கட்டிப்பிடித்து நிறுத்த முடியாது. ஆனால் சமயம் தேவையில்லையென்று பகுத்தறிவுவாதி கூறலாம்; பகுத்தறிவுவாதி பணக்காரனாய், செல்வாக்குடையவனாய் இருந்தால், அந்த அளவுக்குத் தன்னளவில் சிறிது தளர்வுரிமை (Indulgence) பெற முடியுமேயன்றி, மனித வாழ்வில் அதைத் தளர்த்தமுடியாது. மனித இன முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையிட்டுக்கொண்டே, ஆனால் அம்முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாத கால்கட்டாகச் சமயம் இன்னும் பல நூற்றாண்டுகள் இருக்கலாம். ஆனால் படிப்படியாக, வாழ்வின் துறைகள் பெருகி, சமயம் என்ற பெயர் இல்லாமல் போய் விடும் காலம் கட்டாயமாக வரும். ஆனால் அந்நிலைக்கு யாரும் வருந்த மாட்டார்கள்; ஏனெனில் சமயவாதிகள் மேலுலகில் காணும் ஒளி மெய்க்கனவு, அன்று உலகில் நனவாய்விடும். இயேசுகிரிஸ்து தீட்டிய 'கடவுளரசுக் கனவு,' 'குரான்' தீட்டிக்காட்டிய 'துறக்க இன்பம்' அன்று மனிதஇன நனவு வாழ்க்கையாகிவிடும்! ★

விற்பனையாகிறது!

அறிஞர் அண்ணாவின்

எழில் ஓவியம்

ஏராளமான தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க தென்றல் "பொங்கல் மலரில்" வெளியான அறிஞர் அண்ணாவின் மூவண்ணப்படம் பெரிய அளவில், கண்ணாடி போடுவதற்கு ஏற்ற முறையில் வழுவழுப்பான கனத்த ஆர்ட் காகிதத்தில் தயாரித்திருக்கிறோம்.

விலை 31 காசுகள்.

தபாலில் அனுப்ப தபால் செலவு உள்பட 50 காசுகள். வியாபாரிகள் கழிவு 6 காசுகள் நீக்கி தேவையான பிரதிகளுக்கு 25 காசுகள் வீதம் முன்பணத்துடன் விண்ணப்பிக்கவும்.

தென்றல் : : சென்னை-6.

வெண்பாப் போட்டி

11. செத்துப்போ னானே சிவன்?

சங்கொலிக்கப் பூசையிட்டு; சக்தியற்றோர் சேய்பெறவே
லிங்கத்தைச் சுற்றுகின்றார்; லாபமில்லை!-பங்கமிலார்
புத்தியொடு கற்சிலையைப் போட்டுடைக்கக் கண்டதினால்
செத்துப்போ னானே சிவன்?

—பொ. ந. கலியபெருமாள், வடலூர்.

❁

ஐம்பெருங் காப்பியமும், அன்புவளர், பொன்குறளும்
செந்தமிழர் செல்வமொழி சிந்திப்பீர்-இந்திமொழி
ஏற்பவனே, கேள்தமிழா யெம்தாயைக் காக்காது
செத்துப்போ னானே சிவன்?

—ஆ. மஞ்சினி, திண்டிவனம்.

❁

எல்லார்க்குந் தக்கோனாய், இன்பம் அளிப்பானென்
றெல்லோரும் போற்றும் இதமென்ன-தொல்லுலகில்
கத்தி மடிகின்றார் மெத்தப் பசியாலே
செத்துப்போ னானே சிவன்?

—க. சி. இராசியண்ணன், கருகம்பாளையம்.

❁

'அன்று தமிழ்தந்தான்' என்கின்றீர் என்றாலும்
இன்று மொழிகாக்க ஏன்காணோம்?-நன்றிதுவோ
மெத்தப் புகழுடைய முத்தமிழை எண்ணாமல்
செத்துப்போ னானே சிவன்?

—ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

❁

பன்றிக்குப் பால்கொடுத்த பாங்கான இந்நாட்டில்
இன்றெமக்குச் சோற்றுக்கு என்னவழி-என்றறியோம்
எத்துகிறார் உத்தரத்தார் என்செய்வோம் எந்தமிழர்
செத்துப்போ னானே சிவன்?

அந்தியிளங்கீரன், திருப்பனந்தாள்.

❁

"பார்வதியும் சோதித்தாள் பர்த்தாதன் செய்தொழிலை"
பாரிலுள்ளோர் கேட்டுப்பின் போற்றிவந்தார்-ஊரிலின்று
நித்தநித்தம் சாகின்றார்! நீர்தரவும் ஆளில்லை!
செத்துப்போ னானே சிவன்?

—இறைவன், புதுவை.

❁

ஆண்டாண்டு தோறும் 'அரகரா' வென்றழைத்தும்
வேண்டும் வரமில்லை வேதனையேன்-ஆண்டொருநாள்
மத்தால் கடைந்தெடுத்த மாவிடத்தை யுண்டதினால்
செத்துப்போ னானே சிவன்?

—சு. திருநாவுக்கரசு, சென்னை-1.

❁

நலம்விழைவார் என்றெண்ணி நல்வாக்கைத் தந்தோம்
புலம்பி அழுதே பலனென்-உலகத்தில்
எத்திப் பிழைப்போரை ஏனென்று கேட்காமல்
செத்துப்போ னானே சிவன்?

—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

❁

சொத்துத் தமிழிருக்க சொத்தை வடமொழியில்
கத்திக் கதறுகின்றீர் அய்யய்யோ-பக்தர்காள்!
பித்தம் தலைக்கேறி சித்தம் தடைப்பட்டே
செத்துப்போ னானே சிவன்?

—தா. சா. சிங்காரம், எர்ணாகுளம்.

❁

எத்திப் பிழைத்து இன்பபுரி தானென்று
சித்தங் கலைத்து சீர்குலைத்து-நித்தம்
முத்தியென்(று) ஏமாற்றும் மூடரைத் திருத்தாமல்
செத்துப்போ னானே சிவன்?

—எம். பி. பாலு, அய்யாபுரம்.

மதுரை மாவட்ட தி. மு. கழக
3-வது மாநாடு
பழனியில் நடைபெறும்

1958 மார்ச் 8, 9 (சனி, ஞாயிறு) நாட்களில்
பழனி மொய்தீன் பிச்சை பந்தலில்—தாளமுத்து அரங்கில்
நடைபெறும்

தலைவர்: நாஞ்சில் கி. மனோகரன்
திறப்பாளர்:
புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்
அறிஞர் அண்ணா
பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன்
மற்றும் கழக முன்னணியினர் பலர் கலந்துகொள்வர்
இரு நாட்களிலும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்
அவர்கள் நடிக்கும் நாடகங்களும், இசை முரசு நாகூர் அனீபா
அவர்களின் இன்னிசை விருந்தும் உண்டு.
இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம் ரூ. 5, 3, 2
பெண்களுக்கு ரூ. 1

எஸ். முத்து, வ. கு. தலைவர்.
பி. எஸ். சேக், தா. ஆவுடையப்பன் செயலாளர்கள்.
எஸ். எஸ். இராசேந்திரன், பொருளாளர்.
கா. வெங்கிடாசலம், பா. சீனி, தொண்டர்படைத் தலைவர்கள்.

பிப்ரவரி 28உ முதல்
சென்னை—ஸ்ரீ கிருஷ்ணா, வெலிங்டன்
மதுரை —சிந்தாமணி
மற்றும் தென்னாடெங்கும்

விக்ரம் புரொடக்ஷன்ஸ்
குடும்ப கௌரவம்
ஜெமினி கணேசன், சாவித்திரி, ஈ. வி. சரோஜா
ராசகோபால் மற்றும் பலர் நடித்தது.
தயாரிப்பு & டைரக்ஷன்:
பி. எஸ். ரங்கா.
வசனம்:
உதயகுமார்
பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்
அ. மருதகாசி
பூரண உரிமையாளர்கள்:
சரோஜா பிக்சர்ஸ்
சென்னை - 17.

முல்லை
மார்ச் 10-ந் தேதி
எங்கும் கிடைக்கும்.

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ் நாடு.